பக்கங்கள் –
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 101

வெள்ளிக்கிழமை
07 மார்ச் 2025

மாசி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## தேடப்படுகிறார் தென்னக்கோன்

கொழும்பு, மார்ச் 7
முன்னாள் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டார் என்பது தொடர்பில் தகவல் இல்லை எனவும், அவரை 15

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அனைத்து விடயமும் தெரியும்

### விரைவில் வெளியிடுவேன் என்று ஞானசாரதேரர் பரபரப்பு அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 7
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி யார்? என்பது எனக்குத் தெரியும் என்று பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். 15

## அமெரிக்கக் கொள்கைகளால் இலங்கைக்கு பெரும் ஆபத்து

### ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 7
அமெரிக்காவின் வரிக்கொள்கைகள் காரணமாக இலங்கைக்குப் பெரும் ஆபத்துக் காத்திருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எச்சரித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 14

## தலைவர் பிரபாகரனை அஞ்சலிக்க ஏற்பாடுகள்

### புலம்பெயர் நாட்டில் 'அகவம்' அமைப்பு



கொழும்பு, மார்ச் 7
தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அஞ்சலிப்பதற்கு தாயகத்திலும், புலத்திலும் நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றன. 'மேதகு வே.பிரபாகரன் நினைவெழுச்சி அகவம்' 15

## யாழ். போதனா மருத்துவமனை; விரிவாக்க நடவடிக்கை தேவை

### படையின் பிடியிலுள்ள நிலத்தை உடனடியாக விடுவிக்கவேண்டும்

விரிவு :- பக். 14

### இலங்கையில் எதிர்காலத்தில்

## போர் ஏற்படாது என்று உத்தரவாதம் இல்லை

### சத்தாதிஸ்ஸ தேரர் பரப்புரை



கொழும்பு, மார்ச் 7
நாட்டில் எதிர்காலத்தில் போர் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே, படைக்குறைப்புச் செய்யும் நடவடிக்கை மிகவும் ஆபத்தானது என்று ராவணா பலய அமைப்பின் தலைவர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரி 14

## வவுனியா இரட்டைக் கொலை: சந்தேகநபர்களுக்குப் பிணை!

வவுனியா, மார்ச் 7
வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலை சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு வவுனியா மேல்நீதிமன்றம் பிணை வழங்கிஉத்தரவிட்டுள்ளது.
வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடுபுகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி 15

## ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் வடக்கில் தீவிரமாகப் பரவல்!

### முடக்கப்பட்டன ஐந்து பண்ணைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7
வடமாகாணத்தில் ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் தீவிரமாகப் பரவியுள்ளது. இந்தத் தொற்றுக்கு உட்பட்டு 800 பன்றிகள் உயிரிழந்த நிலையில், ஐந்து பண்ணைகள் மூடப்பட்டுள்ளன என்று வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் சிவகுருநாதன் வசீகரன் 15

## தமிழரசுக் கட்சியினது அழைப்புக்கு கூட்டணியுடன் உரையாடியே முடிவு!

### சீ.வீ.கே. சிவஞானத்துக்கு செல்வம் எம்.பி. பதில்

யாழ்ப்பாணம், மார்ச் 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படுவதற்கு முன்வரவேண்டும் என்பது தொடர்பில் தமிழரசுக் கட்சி விடுத்த அழைப்புக்கு, கூட்டணிக் கட்சிகளுடன் (சங்குக் கூட்டணி) கலந்தாலோசித்தே பதில் வழங்கப்படும் என ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.
அந்தக் கடிதத்தின் சாராம்ச 15

## சடலம் மீட்பு!

கிளிநொச்சி, மார்ச் 7
தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில், நேற்று ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பொன்னுத்துரை சித்திரவேல் (வயது-50) என்பவரே 15

## வெளிநாட்டு சிகரெட்கள்; இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 7
3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களை விற்கமுயன்ற புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 15

### முச்சந்தி முராளி



'பிக்கல் பிடுங்கல் இல்லாட்டி உந்தப் பிக்குகளுக்கு பத்தியப்படாது போல'

## பரபரப்பான நிலையில் பொன் அணிகள் போர்

யாழ்ப்பாணம், மார்ச் 7
பொன் அணிகளின் போரில், நேற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 'பொன் 15

## வடக்கின் பெரும்போர்; சென். ஜோன்ஸ் பலம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
வடக்கின் பெரும்போர் கிரிக்கெட் ஆட்டத்தில், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி பலமான நிலையில் உள்ளது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த ஆட்டம் ஆரம்பித்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 06.03.2025 | 4009 | Q | 10 12 51 72 | விசே. எழுத்து Q |
| ஹந்தஹண ராசி சுப பலன் | 06.03.2025 | 1076 | | 01 02 31 35 | வெற்றி இலக்கினம் கும்பம் |
| NLB ஜய | 06.03.2025 | 035 | N | 4 9 7 7 | |
| மெகா பவர் | 06.03.2025 | 2115 | K | 07 10 28 55 | சுப்பர் இலக்கம் 20 |
| மஹஜன சம்பத | 06.03.2025 | 5767 | F | 1 6 3 1 4 2 | |
| தன நிதானய | 06.03.2025 | 1797 | J | 27 55 61 71 | விசேட எழுத்து J |
| அத சம்பத | 06.03.2025 | 342 | F | 3 1 4 2 | |

# கல்விக் கட்டமைப்பை மாற்றுவதற்கு கல்விப்பேரவை விரைவில் அமைப்பு

## பிரதமர் ஹரிணி தகவல்

**கொழும்பு, மார்ச் 7**

**நாட்டில் கல்விக் கட்டமைப்பை மாற்றியமைக்க 'கல்விப் பேரவை' ஒன்றை நிறுவ அரசாங்கம் தயாராகவுள்ளது என்று பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

தேசிய கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

2026 ஆம் ஆண்டு செயற்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்தில், அர்ப்பணிப்புடன் செயற்படும், நல்ல திறன் கொண்ட, கல்வியில் வளம் மிக்க கல்வியாளர்களை உருவாக்க அரசாங்கம் விரும்புகிறது. பொது சேவையில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தரங்களை முதல் 10 சம்பள பிரிவுகளுக்குள் கொண்டுவர முடிந்தது. யார் என்ன சொன்னாலும் அது உண்மைதான். நான் மீண்டும் சொல்கிறேன், நாங்கள் அதைச் செய்துள்ளோம்.

நிதி அமைச்சும், திறைசேரியும் அதை எங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துள்ளன. எதிர்காலத்தில் சம்பள முரண்பாடுகளை நீக்குவதில் தொடர்ந்து பணியாற்றுவோம். அது தொடர்பாக மேலும் விவாதங்கள் நடந்து வருகின்றன.

கல்விக் கட்டமைப்பில் சிக்கல் இருப்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்கிறோம். அதைச் சரிசெய்யவேண்டும். அதை உடனடியாகச் செய்ய முடியாது. இது ஒரு செயல்முறை. அரசாங்கத்தின் தலையீடு மட்டும் போதாது. அமைப்பை மாற்றுவதற்கு நமக்குள்ளும் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். அமைப்பு என்பது நாம்தான். நாம் மாறினால், அமைப்புத் தானாகவே மாறும். அதற்காக, கல்விப் பேரவையொன்றை உருவாக்குவோம் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 06.03.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0475 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 7 2 4 0 0 7 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 06.03.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2741 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 14 76 77 80 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 06.03.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 38 45 64 75 |
| வெற்றி வாரம் | 4902 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 06.03.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0636 |
| வெற்றி இலக்கம் | 04 29 30 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 06.03.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| மீனம் | ♓ |
| வெற்றி இலக்கம் | 10 46 60 62 |
| சீட்டிழுப்பு வாரம் | 4453 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 06.03.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 31 |
| வெற்றி இலக்கம் | 19 24 42 71 |
| வெற்றி வாரம் | 1917 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 06.03.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 04 06 17 31 |
| வெற்றி வாரம் | 2567 |



# கைது வேட்டைக்கு நாம் அஞ்சோம்!

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

கைது வேட்டை மூலம் எமது அரசியல் பயணத்தைத் தடுக்கமுடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச சூளுரைத்துள்ளார்.

பெண் உரிமைகள் பற்றி பேசும் தற்போதைய அரசாங்கம்தான், 97 வயதுப் பாட்டியை கைது செய்து, உணவுகூட வழங்காமல் விசாரணை நடத்தியுள்ளது.

கொள்கைக்காகவே நாம் அரசியல் நடத்துகின்றோம். மாறாக அதிகாரத்துக்காக அரசாங்கப் பலத்தைப் பயன்படுத்துவதில்லை. பலவந்தமாக ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள முற்படுவதும் இல்லை.

அன்று முதல் இன்றுவரை நாம் மக்களுக்காக அரசியல் நடத்துபவர்கள். பொய்கூறி ஆட்சிக்கு வரப் போவதில்லை. நாட்டுக்கு துரோகம் இழைத்ததும் கிடையாது. எனது பாட்டியைக்கூட விட்டுவைக்கவில்லை. அவரையும் கைதுசெய்கின்றனர். இது வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# மன்னாரின் 4 சபைகளுக்கு சுதந்திரக்கட்சி கட்டுப்பணம்

மன்னார், மார்ச் 7

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட சிறீலங்கா சுதந்திரக்கட்சி நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் என்.எம்.எம்.பாரீஸ் தலைமையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய தீப் லொக்கு பண்டார இணைந்து கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

அதற்கமைய மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரசபை, நானாட்டான் பிரதேச சபை, முசலிப் பிரதேசசபை, மாந்தை மேற்குப் பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

மன்னார் பிரதேசசபை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்றுவருகின்றமையினால் மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-56)

# போலி ஆவணம் தயாரிப்பு; மேர்வின் சில்வா கைது

## அவர் விளக்கமறியலில்

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். களனிப் பகுதியில் காணி ஒன்று தொடர்பாக போலி ஆவணங்களைத் தயாரித்துப் பணமோசடி செய்த குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் பெலவத்தை, பத்தரமுல்லையிலுள்ள அவரது வீட்டில் வைத்து மேர்வின் சில்வா கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை போலி ஆவணங்களைத் தயாரித்து 75 மில்லியன் ரூபா மோசடி செய்ததற்காக மேலும் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# மூத்த பிரஜைகளுக்கான வட்டியை அதிகரியுங்கள்

## மூத்த பிரஜைகளின் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 7

மூத்த பிரஜைகளின் 15 இலட்சத்துக்கு மேற்பட்ட நிலையான வங்கி வைப்புகளுக்குரிய வட்டி வீதத்தை 15 வீதமாக அதிகரிக்க வேண்டும் என்று மூத்த பிரஜைகளின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மூத்த பிரஜைகளின் கூட்டமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர் மூத்த பிரஜைகளின் கணக்குக்கு 15 வீத வட்டி வழங்கப்பட்டது. புதிய அரசாங்கம் தேர்தல் வாக்குறுதிகளை மறந்து செயற்படுகிறது.

மூத்த பிரஜைகளை கைவிட்டுவிட்டு, பிடித்துவைத்திருக்கும் வரி 5 முதல் 10 வீதம்வரை அறவிடப்படுகிறது. அதிகரித்துள்ள வரிச்சுமைகளால் எமக்கு நிதி நெருக்கடி ஏற்படுகிறது. இந்த விடயத்தில் நிதியமைச்சுடன் கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கித் தரவேண்டும் என்று அந்தக் கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (எ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அநுர பங்கேற்ற

# யாழ். ஒருங்கிணைப்புக்கூட்டம் 3,65,520 ரூபா செலவு!

யாழ்ப்பாணம், மார்ச் 7

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையேற்று கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி நடத்திய யாழ். மாவட்டச் செயலகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்துக்கு 3 இலட்சத்து 65 ஆயிரத்து 520 ரூபா மாவட்ட செயலகத்தால் செலவழிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் தெரிவித்துள்ளார்.**

அதற்கமைய உணவு மற்றும் சிற்றுண்டிகளுக்காக ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 520 ரூபாவும், மொழிபெயர்ப்பு, ஒலி அமைப்புகளுக்காக 2 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாவும் காகிதாகிகளுக்காக 12 ஆயிரம் ரூபாவும் செலவழிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த வருடம் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 04.01.2024 மற்றும் 06.01.2024 திகதிகளில் யாழ். மாவட்ட செயலகத்தில் இருநாள்கள் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மற்றும் திணைக்களத்தினருடான சந்திப்புககளுக்கு 4 இலட்சத்து 40 ஆயிரத்து 932 ரூபா 90 சதம் செலவழிக்கபட்டுள்ளது என்று உதவி மாவட்டச் செயலர் உ. தர்ஷினி தெரிவித்துள்ளார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாக குறித்த தகவல்கள் வழங்கபட்டுள்ளன. (ச-125)



## மின்சாரம் தாக்கி தாய், மகன் சாவு

கொழும்பு, மார்ச் 7

அம்பாந்தோட்டை சூரிய வெவ பகுதியில் நேற்றுமுன்தினம் மின்சாரம் தாக்கி தாய் மற்றும் மகன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 38 வயதுடையதாயும் அவரது 5 வயது மகனும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவன், வீட்டின் பின்புறம் கட்டப்பட்டுள்ள வெதுப்பகத்தின் பாதுகாப்புக்காகவும், நிறுத்தப்பட்டிருந்த சிறிய பாரவூர்தியின் பாதுகாப்புக்காகவும் பயன்படுத்தப்பட்ட மின்சாரவேலியில் சிக்கியுள்ளார்.

சிறுவனைத் தேடிக்கொண்டிருந்த தாய், வீட்டின் பின்புறம் சிறுவன் மின்சாரவேலியில் சிக்கியிருப்பதைக் கண்டு காப்பாற்ற முயன்றபோது அவரும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர். (ச-இ)

விவசாயக்குழுக்கூட்டங்களில்

## இளம் விவசாயிகளை உள்ளீர்க்கவேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 7

இளைஞர் விவசாயிகளை விவசாயம் சார்ந்த கூட்டங்களில் இனி வரும் காலங்களில் உள்ளீர்க்குமாறு யாழ். மாவட்டச் செயலர் பிரதேச செயலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட விவசாயக்குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயிகளின் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியது எமது கடமையாகும் . இந்த நிலையில் இளம் விவசாயிகளையும் இனி வரும் காலங்களில் விவசாயம் சார் பிரதேசமட்ட கூட்டங்களில் உள்ளீர்க்கவேண்டும். பழமையான சில விவசாய முறைமைகள் மாற்றியமைக்கப்பட்டு நவீன முறைமைகள் உள்ளீர்க்கப்பட்டு வரும் நிலையில் இளைஞர்களின் பங்களிப்பு நிச்சயம் தேவை என்றும் அவர் தெரிவித்தார். (ச- 125)

## மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை அவயவங்கள்


யாழ். பல்கலையால் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 7

வடக்கு- கிழக்கு மாற்றுத்திறனாளிகளை இந்தியாவுக்கு அழைத்துச் சென்று செயற்கை அவயவங்களைப் பொருத்தும் செயற்றிட்டம் யாழ். பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முதற்கட்டமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 20 மாற்றுத்திறனாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு நேற்று தமிழ்நாட்டுக்கு பலாலி சர்வதேச விமானத்தினூடாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அங்கு அவர்களுக்கான செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து செயற்கை அவையவங்களுக்கான மையத்தின் செயற்றிட்டப் பொறியியலாளர் லவன்யா நகுலானந்தம் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள போரால் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்குச் செயற்கை அவயவங்களை வழங்குவதே இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும் என்றார். (ச-20)






**ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கவும் வேணும். ஆனால் உப்பிடி ஆறப் பொறுக்கிற வேலையை நெல்லைக் காயப்போடுறதில காட்டினா முழு நெல்லுமே பாழாப்போடும். பெரும்போக நெல்லுவெட்டு இந்தமுறை முக்கால்வாசி இடத்திலதான் முடிஞ்சிருக்காம். இன்னும் கால்வாசி வயல்கள் இன்னும் வெட்டுப்படாமல் இருக்கு. பிந்தி விதைச்சது, வெள்ளம் வத்தாமல் இன்னும் வயலுக்குள்ளையே வாடகை குடுக்காமல் நிக்கிறது எண்டு இப்பிடி அரிவிவெட்டு பிந்திறதுக்கு கன காரணங்கள். அதைவிட மாரிமழை விட்டும் மார்ச் மழை விடாமல் அடிக்கடி பெய்யிறதால, வெட்டின நெல்லை எப்பிடிக் காயப்போடுறதெண்டு தெரியாததாலயும் கனபேர் நெல்லை வெட்டாமல் பார்த்துக் கொண்டிருக் கினம்.**

**முந்தின காலத்தில படங்கிலதான் நெல்லைக் காயப் போடுவினம். அதால வீட்டு வளவுக்கையோ எங்கையும் வெட்டைக்குள்ளையே நாலைஞ்சுநாள் காயப்போட்டு நெல்லை மூடை கட்டி வைப்பினம். ஆனால் இப்ப படங்குகளையோ அதுக்குப்பிறகு பாவிச்ச தறப்பாளுகளையோ கண்ணிலையும் காணமுடியேல. ஒண்டு ரண்டுபேர்தான் இப்பவும்நெல்லைக்காயப்போடுறதுக்கு படங்கு, தறப்பாள்களைப் பாவிக்கினம். அதோட நெல்லைக் காயப்போடுறதுக்கு இப்ப தளங்களுக்கும் தட்டுப்பாடு. சில மில்காரர் முந்தி தங்கட கொங்கிரீட் தளத்தில நெல்லைக் காயப்போட விட்டவை. இப்ப அவையும் தங்கட வேலைக்கு அந்தத் தளம் தேவையில்லை எண்டு குடுக்கிறேல. சில இடங்களில கமநலத் திணைக்களம் தளங்களைக் கட்டியிருந்தாலும், அது ஆனைப்பசிக்கு சோளப்பொரி மாதிரி பத்தவே பத்தாது எண்ட கதைதான்.**

**அதால இப்ப என்ன செய்யினம் எண்டால், காப்பெற் றோட்டுகளைத் தளமாக்கி, அதில நெல்லைப் பரவிக் காயப்போடுறதை எல்லாரும் பழக்கமாக்கிப் போட்டினம். இதால அந்த றோட்டால போய்வாறவை கடும் கஷ்டப்பட்டு, அங்கலா இஞ்சால வெட்டி வெட்டித்தான் வாகனங்களை ஓடோனும். கொஞ்சம் கவனக் குறைவா நெல்லை முதலே காணாமல் அதுக்கு மேல மோட்டர்சைக்கிளை விட்டால், அப்பிடியே சறுக்கி விழுந்தெழும்போனும். அப்பிடிக் கனபேர் விழுந்திருக்கினம். போனவருசம் இப்பிடி றோட்டில பரவின நெல்லால மோட்டர் சைக்கிள் ஒண்டு அக்சிடெண்ட் ஆகி, ரண்டு பேர் செத்தவை. அதுக்குப் பிறகும் நெல்லைக் காயப்போடுறவை திருந்தேலை. இந்தமுறை சில இடங்களில முழுறோட்டையும் மறிச்சும் நெல்லைக் காயவிட்ட சம்பவங்கள் நடந்திருக்கு. இதுக்கு அவையையும் பிழை சொல்லேலாது. உந்தப் பொருளாதார மத்திய நிலையங்கள் மாதிரி தேவையில்லாத கட்டடங்களைக் கட்டுற நேரத்துக்கு, நெல்லைக் காயப்போடுற தளங்களைக் கட்டியிருந்தால்,சனங்கள் ஏன் காப்பெற்றில காயப்போடப்போகினம். காப்பெற் றோட்டில காயப்போட்டால், வெக்கைக்குத் தார் ஆவியாகி அதால வாற கெமிக்கல் எல்லாம் நெல்லிலையும் சுவறுது எண்டு டாக்குத்தர்மார் சொல்லியிருக்கினம். அப்ப, காப்பெற் றோட்டில போட்டால் அக்சிடெண்ட் மட்டுமில்லை, இப்பிடி கெமிக்கலும் சேர்ந்து உயிரை எடுக்குது. இதை நிப்பாட்டோனுமெண்டால்,நெல்லைக் காயப்போடுறதுக்கு நல்ல தளங்களை அரசாங்கம் போட்டுக்குடுக்கோனும். இல்லாட்டி படங்குகளையாவது கொஞ்சக்காசுக்கு வாடகைக்கு குடுக்க ஏற்பாடு செய்யோனும். அப்பதான் காப்பெற் றோட்டில நெல்லைக் காயப்போடுற வேலைக்கு முடிவுகட்டலாம்.**

padsi@uthayan.com

-பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரம் வழக்கம் போலவே நடைபெறும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். பணிச்சுமை குறையும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டா கும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.


**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். ஆதாயம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். உணவு விடயத்தில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** காரியங்கள் வெற்றிகரமாக முடியும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.



## பெண்நல சிகிச்சைப் பிரிவு வட்டுக்கோட்டையில் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.7

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையின் பெண்கள் நல சிகிச்சைப் பிரிவின் திறப்புவிழா பிரதேச மருத்துவமனையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வடமாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி பரமோதயன் ஜெயராணி, சிறப்பு விருந்தினர்களாக யாழ். வடமாகாண சபை சுகாதார அமைச்சின் பணிப்பாளர் மருத்துவர் எஸ். பத்திரண, யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவர் எஸ்.கேதீஸ்வரன், சங்கானை வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார், சங்கானை ஆதார மருத்துவமனை மருத்துவ அதிகாரி மருத்துவர் சிற்சபேசன் செந்தூரன், வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனை மருத்துவ அதிகாரி மருத்துவர் திருமதி ரதினி சுபாஸ்கரன், வட்டுக்கோட்டை மருத்துவர்களான திரு.திருமதி காந்தநேசன், யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டல் கணக்காளர் இ.ஜீவகன், யாழ்ப்பாணம் நகர அபிவிருத்தி அதிகார சபை பிரதிப் பணிப்பாளர் திருமதி கவிதா ஜீவகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-41)




## வவுனியாவில் தொழிற்சந்தை

வவுனியா, மார்ச் 7

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன், வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் மாபெரும் தொழிற்சந்தை வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவுனியா மாவட்ட செயலாளர் சரத்சந்திர, உதவி மாவட்ட செயலாளர் சாபர்ஜா, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நா.கமலதாசன், வவுனியா தெற்குப் பிரதேச செயலாளர் காஞ்சனா குமார ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-110,18)



## இழப்பீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

அரச காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரிசி ஆலை உரிமையாளருக்கு 17 லட்சம் ரூபாவை காப்புறுதி இழப்பீட்டுத் தொகையாக வழங்கியுள்ளது.

இழப்பீட்டுத் தொகையை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய பொதுகாப்புறுதி முகாமையாளர் அஜித்குமார் வழங்கிவைத்தார்.

சுன்னாகம் பகுதியில் உள்ள அரிசி ஆலையொன்றில் 30 விவசாயிகளின் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில் டிசெம்பர் மாதம் நிலவிய சீரற்ற காலநிலையினால் வெள்ளம் உட்புகுந்து குறித்த நெல்மூடைகள் அழிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

## யாழ்.பல்கலையில் திரைக்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச்.7

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறை 'கலையில் பெண்ணியத் தலையீடு' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்துள்ள அம்ரிதா சேக்கிலினதும் ஜீடி சிக்காக்கோவினதும் வெளிப்பாடுகளான இரு திரைவடிவங்களின் திரைக் காட்சி வெளியிடப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ச-41-66)

## பதநீருக்கு மவுசு

யாழ்ப்பாணம், மார்ச் 7

பண்ணையில் அமைந்துள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் 'தாலம்' விற்பனையகத்தில் பதனீருக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கடும் வறட்சியை அடுத்தே பதனீர் நுகர்வு உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. . (ச-17)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மார்ச்.7

சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு சி.சிவராஜன் தலைமையில் தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயக் கல்யாண மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் கோகிலா மகேந்திரனின் 'இணைகரத்தின் அயற்கோணங்கள்' சிறுகதைத்தொகுதி வெளியீடும், அனைத்துலக மகளிர் தினமும், 'விழிசைச் சிவம்' நல்ல பெண்மணி விருது வழங்கல் நிகழ்வும், 'வாழ்வின் தெரிவுகள்' பயிற்சி நிறைவுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கி. மகேந்திரராஜாவின் 75ஆவது அகவை நிறைவு நாளும், சாதனைச் சிறுவர் பரிசு வழங்கலும், 'இணைகரத்தின் அயற்கோணங்கள்' சிறுகதை விமர்சன அரங்கும், ஒலிவடிவ சிறுகதா நிகழ்வும், 'ஒரு சோகம் இறுகும் போது' சிறுகதா நிகழ்வும் பிரதான நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

ஒரு கெட்ட பழக்கத்தை விடவேண்டும் என்றால்
ஒரு நல்ல பழக்கத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும்.
இதற்கு தீவிரமான முயற்சி தேவை.

—ஸ்ரீராமகிருஷ்ணர்—

## போதைப்பொருளுக்கு காவல் யார்?

வடக்கு மாகாணத்தில் அகலக்கால் பரப்பியிருக்கும் போதைப்பொருள் பாவனைக்கும், போதைப்பொருள் கடத்தல்களுக்கும் பின்னணியில் இருப்பது இராணுவம்தான் என்று நாடாளுமன்றத்தில் தீர்க்கமாகத் தெரிவித்திருக்கின்றார் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குற்றச்சாட்டு மட்டுமல்ல, வடக்கில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் நீண்டகாலமாக இருக்கும் குற்றச்சாட்டு. தமிழ் மக்கள் மனங்களில் உள்ளதையே கஜேந்திரகுமாரும் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்.


வடக்கு மாகாணத்தில் 2009ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னரே போதைப்பொருள் என்ற சொற்பதம் புழக்கத்துக்கு வந்தது. போர் முடிவுக்கு வந்தபின்னர் வடக்கு இராணுவத்தினரின் இறுங்குப்பிடிக்குள்-கட்டுப்பாட்டுக்குள் இருந்தபோதே போதைப்பொருள் மெல்ல மெல்ல உள்ளே ஊடுருவத் தொடங்கியது. போதைப்பொருள் கடத்தல்களின் கேந்திரநிலையமாக வடக்கு மாற்றப்பட்டது. ஒரு கட்டத்தில் இலங்கைக்குள் போதைப்பொருள்கள் புகும் வாயிலாக வடக்கைக் கணிக்கும் அளவுக்கு வடக்கில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் எவ்வித அச்சமும் இன்றித் தங்கள் சமூகவிரோதச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் சூழல் உருவானது. இராணுவத்தினரின் பெரும் பகுதியினர் வடக்கிலேயே குவிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களின் காணிகளை அடாத்தாகப் பறித்து இராணுவம் குந்தியிருப்பதற்கு தேசியப்பாதுகாப்பு என்று காரணம் கூறப்படுகின்றது. இராணுவத்தினருக்கு மேலதிகமாக அனைத்துப் பாதுகாப்புத் தரப்புகளும் வடக்கிலேயே அதிகம் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அரசாங்கப் புலனாய்வு சேவைகளும் வடக்கையே கண்கொத்திப் பாம்பாகக் கண்காணிக்கின்றன. இத்தனைக்கும் மத்தியில் போதைப்பொருள் கடத்தல் நடைபெறுகின்றதென்றால், மேற்சொன்னவர்களின் ஒத்துழைப்பு இன்றி அது நடக்காது என்பது சிறு குழந்தைக்கும் தெரிந்த விடயம்.

வடக்கு மாகாணத்தில் இதுவரை பெருந்தொகையான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டார்கள் என்று கூறப்பட்டாலும், அவை ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்றே கருதவேண்டியிருக்கின்றது. போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்படுவர்கள் பெரும்பாலும் அந்தக் கடத்தலின் சூத்திரதாரியாக இருப்பதில்லை. ஆனால் அவர்களைக் கைதுசெய்வதுடன் தங்களின் கடமை முடிந்துவிட்டது என்பதே பொலிஸாரின் நிலைப்பாடாக இருக்கின்றது. கைது செய்யப்படுவர்களிடம் தகவல் பெற்று போதைப்பொருள் கடத்தல் சூத்திரதாரியைப் பொலிஸார் கைதுசெய்ததாக இதுவரை எந்தவொரு சம்பவமும் இல்லை. பொதுமக்களின் நியாயமான போராட்டங்களின்போது குவிந்திருக்கும் அரச புலனாய்வாளர்களால் ஏன் போதைப்பொருள் கடத்தல் சூத்திரதாரிகள் தொடர்பாக ஒரு சிறுதகவலைக்கூடப் பெறமுடியாதிருக்கின்றது? கடற்படையின் கண்காணிப்பை மீறி எவ்வாறு போதைப்பொருள் வடக்குக்குள் கொண்டு வரப்படுகின்றது?

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியது போன்று வடக்கில் உள்ள போதைப்பொருள் பிரச்சினையின் பின்புலத்தில் இராணுவத்தினரும், கடற்படையினரும் உள்ளனர் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இல்லை. தற்போதைய அரசாங்கம் நாட்டிலிருந்து போதைப்பொருளை ஒழிக்க நினைக்குமானால் முதலில், இந்த ஓட்டைகளை அடைக்கவேண்டும். கடந்த காலங்களில் வடக்கு இளைஞர்கள்தானே போதைப்பொருளுக்கு அடிமையாகின்றனர் என்ற மெத்தனப் போக்கில் இருந்த அரசாங்கங்களைப் போன்றல்லாது, அநுரகுமார அரசாங்கம் இந்த விடயத்தில் அவதானம் செலுத்தினால் மட்டுமே போதைப்பொருளைக் கட்டுப்படுத்தமுடியும். அதிகாரத்தில் இருப்பவர்கள் சரியாகச் செயற்பட்டால் சிறு துணிக்கைப் போதைப்பொருள்கூட நாட்டுக்குள் வராது என்பதற்கு வடக்கு ஒரு காலத்தில் சாட்சியாக இருந்திருக்கின்றது. தற்போதைய அரசாங்கம் அதைப் பின்பற்றினால் - இதுவரைகாலமும் கண்டும் காணாமலும் விடப்பட்டிருந்த ஓட்டைகளை அடைத்தால் - போதைப்பொருளை ஒழிக்கும் அரசாங்கத்தின் இலக்குச் சாத்தியமாகும்.




## நாட்டில் அதிகரித்துவரும் பெருங்குடல் புற்றுநோய்



கொழும்பு, மார்ச் 7

**வயோதிபர்கள் மற்றும் குழந்தைகளிடையே பெருங்குடல் மற்றும் மலக்குடல் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்துவருகின்றது என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஸ்ரீனி அழகப்பெரும தெரிவிக்கையில், இலங்கையில் மட்டும், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,500 ஆண்களும் 1,500 பெண்களும் இந்த நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு மோசமான பழக்கவழக்கங்களும், சுறுசுறுப்பான வாழ்க்கைமுறை இல்லாமையும் பிரதான காரணங்களாகும். நாம் 10 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தோம் என்றால், பெருங்குடல் மற்றும் மலக்குடல் புற்றுநோய்க்கான தரவு மிகவும் குறைவாக இருந்தது. ஆனால் இப்போது மூன்றாவது இடத்தை எட்டியுள்ளது. வயதுதான் நோய்க்குக் காரணம் என்பதல்ல. வயதுக்கு ஏற்ப ஆபத்துக் காரணிகளின் குவிப்பு அதிகரிப்பதால் இந்த நோய் வயதானவர்களை அதிகளவில் தாக்குகின்றது - என்றார். (ச-இ)

## ஈ.பி.எப். சலுகை விதிகள் தளர்வு

கொழும்பு, மார்ச் 7

ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து சலுகைகளைப் பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை எதிர்காலத்தில் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். இதன்மூலம் அதிகமான மக்கள் பயனடைய வாய்ப்புள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கிராமிய மக்களுக்காக இலவசப் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், மார்ச். 7

கிராமப்புற மக்களின் சுகாதார நலன்களைக் கருத்திற்கொண்டு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இலவச மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்மூலம் தொற்றாநோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கலாம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ச-25.6)



## புத்தசாசன அமைச்சுக்கு புதிய செயலர் நியமனம்

கொழும்பு, மார்ச் 7

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் புதிய செயலாளராக டபிள்யூ.பீ.சேனாதீர நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரது நியமனக்கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. (ச-இ)

## இராணுவத்திலிருந்து தப்பிய 679 பேர் கைது

கொழும்பு, மார்ச் 7

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 679 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த காலத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோடும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துடன் அவர்கள் தீய நடவடிக்கைளில் ஈடுபடுவதும் தெரியவந்துள்ளது. அதனடிப்படையில் கடந்த ஜனவரி தொடக்கம் இராணுவத்தில் தப்பியோடுகின்றவர்களைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கை பாதுகாப்பு அமைச்சால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படங்கள்: ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான மிகவும் விறுவிறுப்பான 118ஆவது வடக்கின் சமர் மாபெரும் வருடாந்த 3 நாள் கிரிக்கெட் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது. (ச)



## யாழ். மத்திய கல்லூரிக்கு முதலாவது பெண் அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச்.7

யாழ். மத்திய கல்லூரிக்கு புதிய அதிபராகவும், முதல் பெண் அதிபராகவும் திருமதி சுகந்தினி செல்வகுணாளன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பதவியேற்றுள்ளார். (ச-41-125-66)

## வெள்ளை ஈயை விரட்டும் பணியில் இராணுவம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்.மாவட்டத்தில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த படையினர் களத்தில் ஈடுபடுத்தபடவுள்ளனர் என்று யாழ். மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இடம்பெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் வெள்ளை ஈ தாக்கம் தீவீரமான நிலையில் பரவி வருகின்றது.

அதற்கமைய இதனைக் கட்டுப்படுத்த படையினரை களத்தில் ஈடுபடுத்தவுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆயிரம் தென்னை மரங்களுக்கு வேப்பெண்ணெய் கரைசலை படையினர் மூலம் விசிறியுள்ளோம். அண்மையில் பெய்த மழையை அடுத்து இந்த நடவடிக்கை தடைப்பட்டது. இனிவரும் தினங்களில் படையினர் மூலம் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் அவர் குறிப்பட்டார்.

அதேவேளை வெள்ளை தாக்கம் தொடர்பில் தென்னை அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகள் போதாது காணப்படுகின்றது. அதனை விரைவுப்படுத்த வேண்டும் என்று யாழ் மாவட்ட மேலதிக செயலாளர் கனகராசா ஸ்ரீமோகனன் கோரிக்கை விடுத்தார் . (ச-125)

# எம்.பி.க்களின் நிதி ஒதுக்கீடுகளில் கவனிக்கப்படாத சண்டிலிப்பாய்!

### ஏனைய பிரதேச செயலகங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு

**கொழும்பு, மார்ச் 7**

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டுள்ளதா என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.**

அண்மையில் நடந்த யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. பதில் மாவட்டச் செயலரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலரும் கோரிக்கை முன்வைத்ததை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் சிறியளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 56 மில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சமர்பிக்கும் திட்டங்கள் ஒவ்வொன்றும் 10 லட்சம் ரூபாவுக்குக் குறையாத பெறுமானத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படடுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் தவிர்ந்த ஏனைய 14 பிரதேச செயலகங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட 56 மில்லியன் ரூபாவில், 54 மில்லியன் ரூபா பங்கீடு செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா 9.3 மில்லியன் ரூபாவையும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 மில்லியன் ரூபாவையும் தங்களின் திட்டங்களுக்காகச் சமர்ப்பித்திருந்தனர்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் உள்வாங்கப்படவில்லை என்று யாழ். பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் சுட்டிக்காட்டினார். அதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா தன்னுடைய கிராமமான சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியவிழானில் சந்தை ஒன்றை அமைக்க அனுமதி கோரினார்.

தன்னுடைய திட்டங்களை 9 மில்லியன் ரூபாவுக்குட்படுத்துவதாகவும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து எஞ்சிய 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யலாம் எனவும் குறிப்பிட்டார்.

அங்கு கருத்துத் தெரிவித்த சண்டிலிப்பாய் பிரதேச செயலர், பிரதேசத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் விவசாய வெள்ளவாய்க்கால் புனரமைப்புப் பணிகள், விவசாய வீதி புனரமைப்பு போன்றவை காணப்படுகின்றன என்று தெரிவித்தார். அதையடுத்து அந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் எஞ்சும் தொகையை வழங்க ஒப்புக்கொண்டனர். ஏனைய பிரதேச செயலகங்களுக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாண்டி, அரச அதிகாரிகளின் மூலம் கோரிக்கை விடுத்து இறுதி நேரத்தில் நிதியைப் பெறவேண்டிய நிலைமை காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (எ-125)

## மகளிர்தின நிகழ்வுகள்

கொடிகாமம், மார்ச். 7

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், சர்வதேச மகளிர்தின நிகழ்வு, வடக்கு மாகாண சபை மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் தலைமையில் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கௌரவ விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதரக தலைமை நிர்வாக அதிகாரி சி.எஸ். ரம்யா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச- 25, 159)

★★★★★

யாழ்ப்பாணம், மார்ச்.7

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விழுது மற்றும் ஸ்கோப் திட்டம் இணைந்து நடத்தும் பாரம்பரிய உணவு மற்றும் கலைச்சங்கமம் நிகழ்வு இன்று காலை 9மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-41)

# மதுபான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு அனுமதிக்காதீர்

### வடக்கு ஆளுநரிடம் முறையீடு!

நெடுந்தீவில் மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு அனுமதி வழங்கவேண்டாமெனக் கோரி அந்தப் பிரதேச மக்கள் வடக்கு ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் குறைகேள் சந்திப்பில் ஆளுநர் பங்கேற்ற நிலையில் அதில் அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

அதேவேளை நெடுந்தீவில் தனியார் விருந்தினர் விடுதியொன்று மதுபான அனுமதிப்பத்திரத்தை மீளப் புதுப்பிக்க அனுமதி கோரிய நிலையில் இதற்கான அனுமதியை இரத்துச்செய்யக் கோரி கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக அந்தப் பகுதி மக்கள் இணைந்து போராட்டமொன்றை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னைகளின் தரவுகள்

# சரியாகக் கணிப்பிடாத யாழ்.மாவட்ட அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

**யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்னைகளின் தரவுகள் தொடர்பில் யாழ்.மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் கேட்கப்பட்டபோது துறைசார் அதிகாரிகள் தடுமாறியுள்ளனர்.**

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றபோது நாடாளாவிய ரீதியில் தற்போது காணப்படும் தேங்காய் மற்றும் தென்னைமர வெள்ளை ஈ தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன.

இதன்போது யாழ்.மாவட்டத்தில் எத்தனை தென்னை மரங்கள் உள்ளன? என தென்னைப் பயிர்ச்செய்கை சார்பில் வருகைதந்த அதிகாரியிடம் மாவட்டச் செயலர் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் அதிகாரி, எத்தனை தென்னைமரங்கள் உள்ளன என்று சரியான தரவுகள் இல்லை. அண்ணளவாக 50 லட்சம் தென்னைகள் காணப்படுகின்றன - என்றார். அத்துடன் சரியான தரவுகளை வழங்குவதாகக் கோரி தொலைபேசியில் சுமார் 10 நிமிடங்கள் பரிசலீத்தபோதும் சரியான பதிலை அவர் வழங்கவில்லை.

இதன்போது மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த விவசாயிகள், யாழில் எத்தனை தென்னைகள் உள்ளன என்று தெரியாத அதிகாரிகளால் எவ்வாறு வெள்ளை ஈயைக் கட்டுபடுத்தப்போகின்றார்கள் - என்றனர். (ச-125)



மொட்டுக்கட்சியின்

## கிளி. அமைப்பாளராக மதனவாசன் நியமனம்

கிளிநொச்சி, மார்ச் 7

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகப் பிரதம அமைப்பாளராக முன்னாள் சிரேஷ்ட ஊடகவியலாளரும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் முன்னாள் தவிசாளருமான ப. மதனவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை மொட்டுக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக வழங்கிவைத்தார். (ச-41-20)

சாவ.மருத்துவமனையில்

## மருத்துவர்கள் தங்குமிடம் தேவைப்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், மார்ச். 7

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் காணப்படும் பாவனையற்ற கட்டடங்கள், மருத்துவர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் தங்குமிடமாகப் புனரமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவமனையில் தங்குமிட வசதிகளின்றி மருத்துவ உத்தியோகத்தர்கள் சிரமங்களை எதிர்நோக்கிவந்தனர்.

இந்தநிலையில் கொரோனா விடுதியுடன் பயன்படுத்திய பிரசவ விடுதி, குருதிச் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டதால் அந்தக் கட்டடங்கள் மருத்துவர்கள் தங்குமிடமாக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச- 25, 9)

## 'கலாதாரம்' மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச். 7

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பிரிவின் பிரதேச மலராகிய 'கலாதாரம்' மலர் - 6 க்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேசத்தின் பண்பாடு , வரலாறு, கலை, கலாசாரம், சமயம், மருத்துவம், பாரம்பரியம், பிரதேச ஆளுமைகளின் விபரங்கள், இடப்பெயராய்வுகள், வாய்மொழி வழக்காறுகள், கட்டுரைகள், சிறுகதை, கவிதை, குறுநாடகம், சிறுவர் பாடல்கள், துணுக்குகள், சமையல் விடயங்கள், வரலாற்றுப் புகைப்படங்களும் அதன் விவரங்களும் போன்ற விடயங்களை உள்ளக்கி ஆக்கங்களை எழுதலாம்.

ஆக்கங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது சுயவிவரக்கோவையுடன் நேரடியாகவோ அல்லது பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் கவிதைப் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச். 7

யாழ்.பல்கலைக்கழக தமிழியற்துறையின் ஏற்பாட்டில், கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் கவிதைப் பயிற்சிப்பட்டறை நிகழ்வு கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. தமிழ்த்துறை விரிவுரையாளர்களான த.அஜந்தகுமார், சி.செரஞ்சன் ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைத்து வழங்கவுள்ளனர்.

"கலை" எனும் விடயப்பொருளில் சோ.பத்மநாதன், "மொழி" எனும் தலைப்பில் பா.அகிலன் , "நுட்பம்" எனும் விடயப்பொருளில் சி.ரமேஷ், "தடம்" எனும் தலைப்பில் இ.சு.முரளிதரன், "தருணம்" எனும் தலைப்பில் ந.மயூரதன் ஆகியோர் கவிதை எழுதுவதற்கான பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (ச-25)

# சிறுபோகச் செய்கைக்கு நீர் மார்ச் நடுப்பகுதியில் திறப்பு

நீர்ப்பாசன அமைச்சுசார் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

சிறுபோகப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்காக விவசாயக் காணிகளுக்கான நீரை இம்மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் திறந்துவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டம் அமைச்சர் கே.டி.லால் காந்த தலைமையில் அண்மையில் நடைபெற்றபோதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

ஏப்ரல் இறுதிக்குள் அனைத்து நெல் வயல்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

'பிடியளவு கம நிலத்துக்கு' திட்டமானது தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கைக்கான திட்டம் அல்ல . அந்தந்தப் பிரதேசத்தில் விஞ்ஞான அடிப்படையில் பயிர்ச்செய்கை செய்யக்கூடிய பயிர்களை அடையாளம் கண்டு பிரதேசத்துக்கான விவசாய ஆணையாளரின் அனுமதியைப் பெற்று அந்தப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும் என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. மேலும் நீர்ப்பாசனக் கட்டமைப்பில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கவனம்செலுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் நீர்ப்பாசனப் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டபோது அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குழுவின் தலைவர் தெரிவித்தார். (ச-125)



## சம்பு புல்லினத்தால் நெற்செய்கை பாதிப்பு

அகற்றுமாறு விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 7

மருதங்கேணிப் பிரதேசத்தில் அந்நிய களை இனமான சம்புபுல்லின் வேர்க்கிழங்கு நிலத்தின் கீழ் பரவுகின்றது. இதனால் நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட விவசாயக்குழுக்கூட்டத்தில் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக நாகர்கோவில் பகுதியிலுள்ள வயல் நிலங்களில் இவை அதிகம் பரவுகின்றன. அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் மாற்று நெல்லினத்தை குறித்த பகுதியில் விதைக்கவும் தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ளவேண்டுமென திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை முன்னெடுப்போம் -என்றார். (ச-25,125)


## இஞ்சிச் செய்கை யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாண மாவட்டத்தில் இஞ்சிச் செய்கையை விரைவில் ஆரம்பிப்பதற்கு செய்கையாளர்களுக்கு இஞ்சி விதைக் கிழங்குகளை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்படும் இடங்களில் குறைந்தது ஒரு ஹெக்டேயர் நிலப் பரப்பு வித்தியாசத்தில் இந்தச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இஞ்சிக்கு பற்றாக்குறைஏற்படுவதோடு அவை கூடுதலாக தென்பகுதியிலிருந்தே எடுத்துவரப்படுகின்றன. ஒரு கிலோ இஞ்சி தற்போது 2000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்திகம் நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் வாழ்க்கைத் திறன், உளவியல் நல்வாழ்வு மற்றும் கல்வியின் முக்கியத்துவம் ஆகியவற்றில் குழந்தைகள்எனும் தொனிப்பொருளிலான மாணவர்களுக்கான கருத்தரங்கு, புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நேற்றுச்செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கமலநாதன் வளவாளராக கலந்துகொண்டார். (ச-25, 9)



தேசிய மகளிர் வாரத்தை முன்னிட்டு "ஆரோக்கியமான பெண்கள் தேசத்துக்கு ஒரு பலம்" என்ற தொனிப்பொருளில் பளை நகர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கான கருத்தரங்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வளவாளராக பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மு. ரதிதேவி,பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தவேதன் ஆகியோர் கலந்துகொண்டனர் . (ச-25,9)

## நல்லூர் பிரதேச சபை
## கொக்குவில்
## 2025ம் ஆண்டிற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக் கடைகளை 01.04.2025ம் திகதி தொடக்கம் 31.12.2025ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கோரப்பட்டுள்ளன.

பகிரங்கஏலம் இடம்பெறும் காலம் : 17.03.2025ம்திகதி மு.ப 11.00 மணி
பகிரங்கஏலம் இடம்பெறும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை

2025ம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப் படும் ஏல வைப்புப் பணம் | 2025ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த ஏலத்தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01 | 10,000.00 | 77,625.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02 | 10,000.00 | 119,250.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 20,000.00 | 750,000.00 |
| 2 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 546,000.00 |

குறிப்பு:- ஏலம் இடம்பெறும் குறித்த தினத்தில் மு.ப10.45மணிக்கு முன்னர் மீளளிக்கப் படும் ஏல வைப்புத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்பவர்கள் மாத்திரம் ஏலத்தில் பங்குபற்ற முடியும்


ஏலம் தொடர்பான நிபந்தனைகளை காலை8.30 மணி தொடக்கம் மாலை4.15 வரை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**
07.03.2025

# மரண அறிவித்தல்

## திரு P.F.J. தேவநாயகம்

**ஓய்வுநிலை பொறியியலாளர் (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மன்னார்)**



தோற்றம்
05.08.1946

மறைவு
23.02.2025

**ஆண்டவரே நீர் தேர்ந்தெடுத்த மக்களின் நல்வாழ்வை நான் காணும்படி செய்யும்(தி.பா 106:5)**

யாழ். நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், இல. 4A, அச்சுக்கூட வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்போது பிரித்தானியா லண்டன், Gloucester, Lancaster ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட P.F.J. தேவநாயகம் அவர்கள் கடந்த 23-02-2025 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சவரிமுத்து போல்-சிசிலியா போல் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை-மேரி திரேசா தம்பதியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோசப்பின் (தவமணி) அவர்களின் அன்புக் கணவரும், அருமைநாயகம் (Holland) மற்றும் காலஞ்சென்றவர்களான புஷ்பம் மகேஸ்வரி, அருட்சகோதரி பிறிசில்லா (திருக்குடும்பக் கன்னியர் சபை), வினிபிரட்(சறோ), றெஜினா ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,சுபத்திரா (சுபா-(UK), அருண் (UK), ஹேமன்ராஜ் (UK), செல்வராணி (பெறாமகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜித்தா (UK), சசிரேகா (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், நெய்த்தன், ஜொஹானன், அபிகேயில், ஜொஹாஷ், றித்திக், அலெக்ஷன்- ஆதனியா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான முத்துராஜா, பசில் அன்ரன், மரியநாயகம், சாந்தி (UK) மற்றும் பிரான்சிஸ் சந்திரா, இம்மானுவேல் ஆனந்தம் (UK), எமிலியானுஸ்பிள்ளை, மேரி பூமணி, பெனிக்னா நவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் உடல் அஞ்சலிக்காக St Patricks Ct, Brockworth, Gloucester GL36HL, United Kingdom இல் (08.03.2025) சனிக்கிழமை மு.ப 11.00-02.00 மணி வரை வைக்கப்படும். இரங்கல் திருப்பலி 11-03-2025 செவ்வாய்க்கிழமை அன்று யாழ். மரியன்னை தேவாலயம் (பெரியகோயில்) இல் மு.ப 09:00 மணியளவில் நடைபெறும் என்பதுடன், நல்லடக்கம் Slyne cemetery Bottomdale Rd, Slyne, Lancaster LA2 6BG UK எனும் முகவரியில் நடைபெறும். கிழமை, நேரம் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எமிலியானுஸ் மைத்துனர் : + 94 77 829 1061
அருண் - மகன் : + 447 34 009 7748
ஹேமன்ராஜ் - மகன் : + 447 59 929 8140

தகவல்:
குடும்பத்தினர்

(CS 2676) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 . 10 . 1964 | 27 . 02 . 2023 |



## சிவஞானஜோதி கிருஷ்ணமோகன்

(ஆரம்பக்கல்வி பயிற்றப்பட்ட ஆசிரியர்
யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்)

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
நல்லக விளக்காம் ஜோதி மறைந்து
இரண்டு ஆண்டுகள் நகர்ந்தன கரைந்து
கல்வியில் சிறந்து தன் மாணாக்கர்
தமக்கு நல்லதோர் ஆசானாய்
கல்விக்கண் திறந்து அளப்பரிய
அறிவு விளக்கேற்றி வளர் பிறை
அட்டமியன்று எங்கு சென்றாயோ?

சிவன் கோவிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
கணவன்
சு.கிருஷ்ணமோகன் (மோகன்)

(CS/57661) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 . 07 . 1967 | 03 . 03 . 2025 |



## செல்வி ஆறுமுகம் விஜயநிர்மலா
(விஜயா)

காளிகோவிலடி, களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் சென்ஜேம்ஸ் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஆறுமுகம் விஜயநிர்மலா (விஜயா) அவர்கள் கடந்த (03.03.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-கமலாம்பிகை தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கோபாலகிருஷ்ணன், புண்ணியமூர்த்தி மற்றும் சிவபாலன் (சிவம்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிறேம்மளாவின் (கனடா) மைத்துனியும் காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் தெட்சனாமூர்த்தியின் மருமகளும் திவ்யா, கஜன், லக்ஷன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளான்-விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சென்ஜேம்ஸ் வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
ஆ.சிவபாலன்
(சகோதரர்-கனடா)
+647 554 5390
076 628 7353

(CS 1139) V-1

## நினைவுரையும் திரைநீக்கமும்

யாழ்., மார்ச். 7

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், 'இறைபணிச் செம்மல்' அமரர் சதாசிவம் மகாலிங்கத்தின் திருவுருவப்படத் திரை நீக்கமும் நினைவுரைகளும் சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோவில் நால்வர் மணிமண்டபத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

(ச-25)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## தங்கராசா செல்லக்கிளி



பூமியின் கதவு உடைபட்டது - எங்கள்
குலவிளக்கு ஏனோ விடைபெற்றது சந்தோசம் எம் வானில்
தடைப்பட்டது கண்மடல் நீர் நிரம்பி பெருக்கெடுத்தது

"அறம்" அதன் நிறம் மாறாது வாழ்ந்தீர்
பெற்றவர்கள் உற்றவர்கள் என்பதை தாண்டி ஊர் உலகத்தால் மதிக்கப்பட்டவள்
தீங்கு என்பதை தினை அளவும் எண்ணாத
அதிமானுடன் அப்பழுக்கற்ற அன்னை பெரிதாய் சொல்வதெனில்
உங்களைப்போல் வாழ்ந்தவர்கள் அரிது

இன்று
ஊர் போற்ற நாம் வாழ அடி எடுத்தும் கொடுத்தீரே
இடம்பெயர்ந்து இடர்ப்பட்டபோதெல்லாம் - எமைத்தாங்கினீர்
மரணம் மணத்த தருணங்களில் கூட
மலையென அருகிருந்து அரவணைத்தீர்
எதற்கும் அஞ்சாத துஞ்சாத அரணே எமக்கான அரசியே
ஏன் விடைபெற்றீர்.....?

அம்மா
உங்களை நினைக்க நினைக்க மனதில் நூறு நினைவுகள்
தோன்றி மறைகிறது உண்மையில் நீங்கள்
மறைந்துவிட்டதை மனம் ஏற்க மறுக்கிறது
உருகி உருகி எமை வளர்த்த வரமே - எங்கள்
கண்களில் அருவி பெருகி பெருகி வழிகிறது நெஞ்சு நெருப்பில் எரிகிறது
நீங்கள் ஓய்வு எடுத்து ஓரமாய் இருந்ததைக் கூட கண்டதில்லை நாங்கள்.

ஆறாத சோகத்துடன் கண்ணீர்க் குடம் உடைத்து விடைதருகிறோம்
சென்று வாருங்கள் எங்கள் தாயே
ஆத்மா அழிவில்லாதது...

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.05.1952 | 05.02.2025 |

9 ஆம் வட்டாரம், மல்லிகைத்தீவு,
புதுக்குடியிருப்பு.

துயர் பகிர்வோர்
குடும்பத்தினர்.
077 559 4741

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் திருகோணமலை மற்றும் மூதூர் கல்வி வலயங்களைச் சேர்ந்த 38 பாடசாலை மாணவர்களுக்கு 25 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கினர். (ச 25, 9)



இலங்கை மகாவலி அதிகாரசபையின் "விளைநில மறுமலர்ச்சி துரிதப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டம் 2025" தொடர்பான கலந்துரையாடல் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மாலதி தலைமையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுச்செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
(ச-25,9)



# கடற்புல்தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நீருயிர்வளத் தொழில்நுட்பப் பாடம் கற்கும் தரம் 11 மாணவர்களுக்கிடையே கடற்புல் தொடர்பான விழிப்புணர்வு வினாடிவினாப் போட்டி நடத்தப்பட்டு அதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வலிகாமம் கல்வி வலயத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. தொழில்நுட்பப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நளாயினி வசந்தன் தலைமையில் இடம்பெற்ற விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலன் பங்கேற்றார். (ச-41-20)



தேசிய மகளிர் வாரத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக மகளிர் விவகார அலகினரால், புலோப்பளை மேற்குக் கிராம அலுவலர் பிரிவில் "பெண் தொழில் முயற்சியாளர்கள் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புதல்" என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வளவாளராக பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மு. ரதிதேவி கலந்துகொண்டு உரையாற்றினார். (ச-25-9)

## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி 2025 ( கட்டம் 1)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2025.03.07 - 2025.03.20 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம். பிரதி) 2025.03.21 திகதி 10.30 மணிக்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2025.03.14 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02/05/CF / 2025/03 | தொகுதி A<br>1. செட்டிவளவு வீதி புனரமைத்தல், இணுவில் மேற்கு<br>2. வங்கியடி குறுக்கு வீதி புனரமைத்தல் , இணுவில் கிழக்கு | 3.23 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 09.05.2025 | 33,000.00 | 06.06.2025 வரை |
| 02. | NP/14/41(15)/02/05/CF / 2025/04 | ராஜா மில் வீதி புனரமைத்தல், தாவடி வடக்கு | 3.22 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 09.05.2025 | 33,000.00 | 06.06.2025 வரை |
| 03. | NP/14/41(15)/02/05/CF/ 2025/05 | வாதனை வீதி புனரமைத்தல், சங்குவேலி | 4.64 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 09.05.2025 | 47,000.00 | 06.06.2025 வரை |
| 04. | NP/14/41(15)/02/05/CF/ 2025/06 | வில்வக்குடயன் வீதி புனரமைத்தல், உடுவில் தென் கிழக்கு | 4.77 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 09.05.2025 | 48,000.00 | 06.06.2025 வரை |
| 05. | NP/14/41(15)/02/05/CF/ 2025/07 | தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதியின் குறுக்கு வீதி புனரமைத்தல், புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 3.05 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 09.05.2025 | 31,000.00 | 06.06.2025 வரை |
| 06. | NP/14/41(15)/02/05/CF/ 2025/08 | தொகுதி B<br>1. ஏழாலை மில் வீதி உப வீதி அமைத்தல்<br>2. ஞானவைரவர் வீதி மிகுதி வேலை, குப்பிளான் வடக்கு<br>3. தம்பிப்பிள்ளை மணியகாரன், செல்லப்பா மணியகாரன் வீதியின் இணைப்பு வீதி புனரமைத்தல், புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 2.01 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 09.05.2025 | 21,000.00 | 06.06.2025 வரை |

தலைவர்
பிரதேச பெறுகைக்குழு,
வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.


2025.03.07

(CR/44502) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஆனந்தராசா சந்திரமோகன்



**தோற்றம்** 10.08.1955 **இறப்பு** 06.03.2025

பிருந்தாவனம், இமையாணன், உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் இல.10 பிரம்படி ஒழுங்கை கொக்குவில் கிழக்கு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தராசா சந்திரமோகன் அவர்கள் நேற்று (06.03.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தராசா-சரஸ்வதி தம்பதியின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கிருஷ்ணகுமாரி அவர்களின் பாசமிகு சகோதரனும் சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்- BOC) அவர்களின் மைத்துனரும் தர்சிகா (Asst Project Manager NCI) கோபிநாத் (Engineer C.E.B), Dr. பானுரேகா ஆகியோரின் அன்பு மாமனும் நிவேஜிதன் (Lecturer), பைரவி (Dentist) ஆகியோரின் சிறிய தந்தையும் அக்ஷயா, அபிநயா, ஜானவி, அபிமன்யு, கரிகாலன், லோகவி, கயல்விழி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல 10, பிரம்படி ஒழுங்கை கொக்குவில் கிழக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல 10, பிரம்படி ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 479 7596, 077 239 2089**

(CS 2681) V-1

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 18.11.1933 **மறைவு** 06.03.2025

## கொன்ஸ்ரன்ரைன் மரியதாசன் (செல்லத்துரை)

அச்சுவேலி தென்மூலையைப் பிறப்பிடமாகவும் பண்டியன்தாழ்வு, ஐயன்கன் குளம், சுண்டிக்குளியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கொன்ஸ்ரன்ரைன் மரியதாசன் (செல்லத்துரை) அவர்கள் நேற்று (06.03.2025) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொன்ஸ்ரன்ரைன்-மரியமுத்து தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான யோசேப்-அன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மேரி அஞ்சலா அவர்களின் பாசமிகு கணவரும், ஜெகூ (பேரவைச் செயலாளர், வடக்கு மாகாணசபை) ஆஞ்சலோ (கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வடக்கு மாகாணம்) ஜெனற் பபியூலா (கிராமசேவையாளர் யோகபுரம் மேற்கு, மல்லாவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. கமலா (பொது வைத்திய நிபுணர்) அனுஷியா, தெய்வீகராஜபதி (இளங்கோ) (ஆசிரியர் மு/நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பேர்ணடேட், யேசுதாசன், யோசேப், றீற்றா மற்றும் மாகிறேற் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கேதுஷாத் (சிபி), கவிநயா, தருண், றினோஜன், யூலின் மெலானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.03.2025) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் மு.ப. 10.00 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சூசையப்பர்சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுண்டிக்குளி**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 386 8585**

(CS 44505) V-1

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை கோணேஸ்வரன் (சந்திரன்)

(ஓய்வு பெற்ற கைதடி முதியோர் இல்லப் பணியாளர்)

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கோணேஸ்வரன் அவர்கள் நேற்று (06.03.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற அஞ:சல் அலுவலகர்)-கமலாச்சி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா-அழகம்மா தம்பதியின் அன்பு மருமகனும் சத்தியலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் லக்சனா (பிரதேச செயலகம்-கோப்பாய்) அவர்களின் அன்புத் தந்தையும் ரமணனின் (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) அன்பு மாமனாரும் விருத்ராமின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான கேதீஸ்வரன் (தபால் அலுவலகம்-கைதடி), கோடீஸ்வரன் (தபால் அலுவலகம்-கைதடி), ரிஷிகேஸ்வரன் மற்றும் ரதீஸ்வரன் (லண்டன்), விஜிதா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனலோஜினி (ஓய்வு பெற்ற தாதியர்-கைதடி முதியோர் இல்லம்), அருந்தவதேவி, இதயனி (லண்டன்), சோபனா (லண்டன்), தவராஜசிங்கம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற மயில்வாகனம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) அவர்களின் பெறா மகனும் வசந்தமாலா (கணக்காளர்- கிளி/பொலிஸ்நிலையம்), வசந்தசிவா, வசந்தன் ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும் திசாந்தின் சிறிய தந்தையும் பிரஜீத், அத்ஜித், சாரூகா (லண்டன்), அஸ்வின், அக்நிசா (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் அஜன் (ஜேர்மன்), ராம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, கனகசபாபதி மற்றும் அமிர்தலிங்கம் (ஓய்வு பெற்ற தபால் அலுவலகர்-நீர்வேலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானம் சிவியாக கடவையில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 16.02.1949 **மறைவு** 05.03.2025

## திருமதி சரோஜினிதேவி

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 11 பி.ஏ.தம்பி ஒழுங்கை வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி குலசிங்கம் அவர்கள் 05.03.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் குலசிங்கத்தின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பாக்கியம் தம்பதியின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி, இராமாசிப்பிள்ளை தம்பதியின் அருமை மருமகளும், அருள்மோகன், அருள்மதி, காலஞ்சென்ற அருள் மதன் மற்றும் அருள்நிதி ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திரா, கேதீஷ்வரன், (ராசன்), பானுமதி (வாணி), தற்பரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கேசவதாதன் மற்றும் திருச்செல்வம் (பரமநாதன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாக்கியலெட்சுமி, விசயலெட்சுமி (கிளி), காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை (ஐயாத்துரை), புஷ்பவதி, நல்லம்மா, வீரசிங்கம், அமரசிங்கம், திரு. பரநிருபசிங்கம், பரிமளாதேவி ஆகியோரின் அன்பு மைந்துனியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, சதாசிவம், சண்முகநாதன், நல்லம்மா, திலகவதி, திருமதி இரத்தினாம்பாள், திரு இராசலிங்கம் ஆகியோரின் அருமைச் சகலியும், கோபிஜா, நிதுர்ஷன், கதீஷன், தஷானா, பஷ்மிகா, கவினஜா ஆதிகா அத்விக் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 09.05.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக யாழ். கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இந்திரா : 076-555 1903**
**ராசன் : 077-269 1268**
**மதி : 076-966 2121**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 2682) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## உப அலுவலகம் - நீர்வேலி
## ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்.

யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகத்திற்குட்பட்ட ஆதன இல - 71, வட்டாரம்- 01, சுன்னாகம் வீதி என்னும் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம், குழந்தைவேலு கதிரேசு உரிமை கோருனர் இராசதுரை செல்வரத்தினம் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தினை குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியினைச் சேர்ந்த வினாயகமூர்த்தி உதயகுமார் பெண் உதயகுமாரி என்பவர் 07.05.2000ம் திகதி, பிரசித்த நொத்தாரிசு பவானி சற்குணராசா முகதாவில் 815 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய பிரகடன உறுதியின் மூலம் அவ்வாதனத்தின் சொந்தக்காரர் தாமே என வெளிப்படுத்தல் செய்துள்ளார். குறித்த ஆதனம் தொடர்பில் இவ்வாதனமானது வினாயகமூர்த்தி உதயகுமார் பெண் உதயகுமாரி எண்பவர்களிற்கிடையே நடந்த விவாகம் காரணமாக 1987 ம் ஆண்டிலேயே அறுதியாக வினாயகமூர்த்தி உதயகுமார் பெண் உதயகுமாரி எனும் பெயரில் வாங்கப்பட்டதென்றும் அன்றிலிருந்தே ஆட்சி பண்ணி வருவதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது ஆதன அட்டவணையில், வடமாகாணம், யாழப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று, நீர்வேலி இறை மங்கலாவத்தை" பேட்செஸ் 18.8 பதினெட்டுத் தசம் எட்டும் தெற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் இதற்கு தற்காலம் நில அளவையாளர் P.செல்லத்துரை அவர்களால் 06.04.2000ம் திகதி 106ம் இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நிபர 1குளி 12.0 இதற்கு எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை நடராஜாவிற்குரிய ஒழுங்கை வடக்கு றோட்டு மேற்கு இராஜதுரை செல்வரத்தினத்திற்குரிய ஆதனம் தெற்கு தம்பிப்பிள்ளை நடராஜாவுக்குடைய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்டவையடங்கலும் தெற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் என காணப்படுகின்றது.

தற்போது இவ்வாதனத்தை வினாயகமூர்த்தி உதயகுமார் பெண் உதயகுமாரி, தனது பெயரிற்கு எமது ஆதனப்பதிவேட்டில் ஆதனப் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்வதுடன் யாரும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது "வினாயகமூர்த்தி உதயகுமார் பெண் உதயகுமாரி" என்னும் பெயரிற்கு, பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகிழக்கு பிரதேசசபை
புத்தூர்.

(CS/57676) J-1

## ஆதன உரிமைபெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்குபிரதேசசபை | :- மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- செல்வேந்திரன் செல்வலக்சுமி. கதிர்காமநாதர் சிதம்பரநாதர், கதிர்காமநாதர் முருகதாசன் |
| விண்ணப்பதாரர் பெயர் | :- Dr(Mrs). செல்வலக்சுமி செல்வேந்திரன் |
| முகவரி | :- B - 30-1/1, Soysapura Flats, Moratuwa. |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 21, பங்களா வீதியில் ஆதன் இல. 43/18 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று. மல்லாகம் இறை "வேல்விக்கிரமன் சீமா மறுபெயர் விக்ரமன் சீமா" என்ற ஆதனம் A. இராசரத்தினம் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு கு. விசுவலிங்கம் முகதாவில் 8806ம் இலக்கத்தில் 04.02.2020ம் திகதியில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் வேல்விக்ரமன் சீமா மறுபெயர் விக்ரமன் சீமா நிலப்பரப்பு 06 இல் சொரியல் அரைவாசியும், தச்சன்சீமா நிலப்பரப்பு 6½ இரண்டும் ஒன்று சேர்ந்து நிந்த ஆட்சிப்படி நில அளவையாளர் M. சிற்றம்பலம் 03.01.2020ம் திகதியில் அளந்து வரைந்த 4812ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 எனக்குறித்த நிலப்பரப்பு 11 குளி 2.86 விண்ணப்பதாரர்களை வந்தடைந்துள்ளது. 8806 உறுதியில் குறித்த ஆதன் பாகங்களில் மொத்த விஸ்தீரண நிலப்பரப்பு 9 ½ எனினும் நிந்த ஆட்சிப்படி நிலப்பரப்பு 11 குளி 2.86 என மேற்படி உறுதியில் ஆதன அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறித்த உறுதி யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள G 142/42 இலக்க காணிப்புத்தக பிரதி இணைக்கப் பட்டுள்ளது. 8806 இலக்க உறுதியின் தாயுறுதிகளாக பிரசித்த நொத்தாரிசு S. செல்வராஜா முகதாவில் 1975.01.17ம் திகதியில் 2918ம் இலக்கத்திலும், பிரசித்த நொத்தாரிசு தி. குமாரசாமி முகதாவில் 1961.03.08ம் திகதியில் 11670ம் இலக்கத்திலும் நிறைவேறிய உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 8066ம் இலக்க உறுதியின் முற்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் H585/159 இலக்க காணிப் பதிவுப் புத்தகப் பிரதி இவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை என்பதுடன் H338/291 இலக்க காணிப்புத்தகப் பிரதியானது இவ் ஆதனத்துடன் தொடர்புபட்டதல்ல.

8806 இலக்க உறுதியின் தாயுறுதிகளில் ஒன்றான பிரசித்த நொத்தாரிசு S. செல்வராஜா முகதாவில் 1985.01.17ம் திகதியில் நிறைவேறிய 2918ம் இலக்க அறுதி உறுதியின் ஆதன அட்டவணையில் வேல்விக்கிரமன் சீமா நிலப்பரப்பு 06 இல் சொரியல் அரைவாசி எனவும். பிறிதொரு தாயுறுதியான பிரசித்த நொத்தாரிசு தி.குமாரசுவாமி முகதாவில் 1961.03.08ம் திகதியில் 11670ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியின் 1ம் ஆதன அட்டவணையில் தச்சன் சீமா நிலப்பரப்பு 6 ½ எனவும். 2ம் ஆதன அட்டவணையில் வேல்விக்கிரமன் சீமா நிலப்பரப்பு 06 இல் கிழக்காக நிலப்பரப்பு 02 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தாயுறுதியில் குறித்த ஆதன பாகங்களின் மொத்த விஸ்தீரணம் நிலப்பரப்பு 11 ½ ஆகக் காணப்படுகின்ற போதிலும் 8806ம் இலக்க உறுதியின் ஆதன அட்டவணை குறித்த ஆதனங்களின் மொத்த விஸ்தீரணம் 9 ½ ஆகக் காணப்படுவதுடன் நிந்த ஆட்சிப்படி நிலப்பரப்பு 11 குளி 2.86 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோயிற்பற்று மல்லாகம் இறை. வலிவடக்கு பிரதேச சபை பிரதேச செயலகம் ஜி.எஸ் J/212 வேல் விக்கிரமன் சீமா மறுபெயர் விக்ரமன் சீமா நிலப்பரப்பு ஆறு இல் அரைவாசி தச்சன் சீமா நிலப்பரப்பு 06 ½ இவை இரண்டும் ஒருங்கு சேர்ந்து நிந்த ஆட்சிப்படி நில அளவையாளர் M.சிற்றம்பலத்தின் பட இல. 4812 திகதி 03-01-2020 படத்தில் முதலாம் துண்டு காணி நிலப்பரப்பு (11) பதினொன்று குழி (02-86) இரண்டு தசம் எட்டு ஆறு வீடு கிணறு

**இதற்கான எல்லைகள்**

கிழக்கு - ஒழுங்கை
வடக்கு - இராசரத்தினம் கதிர்காமநாதருக்குரிய ஆதனம்
மேற்கு - துரையப்பா புஸ்பலீலாவின் ஆதனம்
தெற்கு - இராசரத்தினம் கதிர்காமநாதனின் ஆதனமும் திலகவதி செல்வேந்திரனின் ஆதனமும் கை ஒழுங்கையும்

மேற்குறித்த ஆதனத்தை செல்வேந்திரன் செல்வலக்சுமி. கதிர்காமநாதர் சிதம்பரநாதர், கதிர்காமநாதர் முருகதாசன் என்னும் பெயர்களுக்கு ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் செல்வேந்திரன் செல்வலக்சுமி. கதிர்காமநாதர் சிதம்பரநாதர். கதிர்காமநாதர் முருகதாசன் பெயர்களுக்கு ஆதன் உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** (CS.57663) (N-1)

# செவ்விளநீர் விலையேற்றம்

தற்போது கடும் வெப்பமான வறட்சி நிலவுவதையடுத்து செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தேங்காய்க்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை விலை அதிகரிப்பால் செவ்விளநீரின் விலையும் எகிறியுள்ளது. தென்பகுதியிலிருந்து போதியளவு செவ்விளநீர் குடாநாட்டுக்கு எடுத்து வருவதும் குறைவடைந்துள்ளது. செவ்விளநீர் ஒன்று 200ரூபா முதல் 300ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. (ச-41-17)

## இலங்கையின் கடவுச்சீட்டு பலவீனமானது

உலகின் பலவீனமான கடவுச்சீட்டு பட்டியலில் இலங்கை இடம்பிடித்துள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கை 91 ஆவது இடத்தில் உள்ளது. சூடான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளும் அந்த இடத்தில் உள்ளன. வீசா இல்லாத பயணத்தை அனுமதிக்கும் நாடுகளில், சிங்கப்பூரின் கடவுச்சீட்டு மிகவும் மதிப்புமிக்கதாக மாறியுள்ளது. சிறந்த கடவுச்சீட்டு பட்டியலில் ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகியன இரண்டாவது இடத்தில் உள்ளன. (ச-இ)

## சா/த பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைப்பு


கொழும்பு, மார்ச் 7

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரர்களின் பரீட்சை அனுமதி அட்டைகள் அதிபர்களுக்கும் தனியார் விண்ணப்பதா ர்ர்களின் அனுமதி அட்டைகள் அவர்களின் முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். (ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 10 . 1947



மறைவு
05 . 03 . 2025

## நீக்கிலஸ் பிலிப்பானந்தம்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் பண்டியந்தாழ்வு மற்றும் 3 ஆம் ஒழுங்கை A V Road கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் பிலிப்பானந்தம் நேற்றுமுன்தினம் (05.03.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் - பவுன்ரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், தேவசகாயம் - திரேஸ்மலர் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், நிஷாந்தினி, நிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், லக்ஷ்மன், நிறஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யசிந்தா, காலஞ்சென்ற அரியரெட்ணம் மற்றும் வனிதா, றேமன், சறோ, கலா, ரவி ஆகியோரின் சகோதரனும், ஜெயரட்ணம், ஜெயக்குமாரி, ஜெயக்குமார், காலஞ்சென்ற அன்ரன் ராஜ்குமார் மற்றும் PC என அன்பாக அழைக்கப்படும் சந்திரகுமார், சுரேஷ்குமார், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் வசந்தி, றஞ்சி, ராஜா, எஸ்தர், பவானி, பிறோமா, கிறிஸ்ரி, யானகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெய்டன், யஸ்ரின், சோபியா, மியூறில் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**3 ஆம் ஒழுங்கை,**
**A V Road,**
**கொழும்புத்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 600 2194**

(CS57674) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

பொதி செய்தல், கூலியாட்கள், மில் வேலை தெரிந்தவர்கள் (நெல், தானியங்கள்)

தொடர்பு: 077 772 2215

## அறை வாடகைக்கு உண்டு

நல்லூர் கல்வியங்காடு சந்திக்கு அருகாமையில் பெண்கள் (மாணவர்கள், அரச உத்தியோகத்தர்களுக்கு) அறை வாடகைக்கு கொடுக்கப்படும்.

குறிப்பு:- சமையல் அறையில் சைவ உணவுகள் மட்டும் சமைப்பதற்கு அனுமதிக்கப்படும்.

தொடர்பு: 076 578 9372


## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 08 வைமன் வீதியில் அமைந்துள்ள 21/1,21/2 எனும் ஆதனம் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் மாணிக்கம் பெண் சின்னாச்சி எனப் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கான யாழ் நொத்தாரிசு S.K.ஆபிரகாம் முகதாவில் 1930.04.07ம் திகதி 15091ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி தொலைந்து விட்டதாக கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வைமன் வீதியைச் சேர்ந்த நமசிவாயம் மாணிக்கமும் பெண் சின்னாச்சிப்பிள்ளையும் என்பவர்கள் யாழ் நொத்தாரிசு அ.தனபாலசிங்கம் முகதாளில் 1944.04.27ம் திகதி 50 இலக்கத்தில் நிறைவேறிய அறுதி மூலம் வண்ணார்பண்ணை கிழக்கு வீரசிங்கம் குமரசிங்கம், வீரசிங்கம் இராஜசிங்கம், வீரசிங்கம் தனபாலசிங்கம், வீரசிங்கம் விஜயசிங்கம், வீரசிங்கம் காராளசிங்கம் என்பவர்களுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் மாழ்ப்பாணம் வைமன் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம் பெண் சொர்ணலெட்சுமியும் என்பவர் யாழ் நொத்தாரிசு அ.தனபாலசிங்கம் முகதாவில் 1969.07.17ம் திகதி 3 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் வண்ணார்பண்ணை கிழக்கு வீரசிங்கம் குமாசிங்கம், வீரசிங்கம் தனபாலசிங்கம், வீரசிங்கம் விசயசிங்கம், வீரசிங்கம் காராளசிங்கத்திற்கும். தம்பையா வல்லிபுரத்தாரிற்கும் குறித்தபாதை உரித்தையும் வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் வீரசிங்கம் விசயசிங்கம் என்ப யாழ் நொத்தாரிசு ஆதனபாலசிங்கம் முகதாவில் 196907.17ம் திகதி 6905ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் வீரசிங்கம் தனபாலசிங்கம் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ் நொத்தாரிசு அ.தனபாலசிங்கம் முகதாவில் 1969.07.17ம் திகதி 6908ம் இலக்க பிரிவிடுதல் உறுதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் வீரசிங்கம் தனபாலசிங்கம் என்பவர் யாழ் நொத்தாரிசு இராமலிங்கம் பாலசுப்பிரமணியம் முகதாவில் 1977.06.12ம் திகதி 323ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கதிர்காமு இராசரத்தினத்திற்கும் பெண் நளாயினிதேவி இற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் முத்தையா கனகசபையும் பெண் நளாயினிதேவியும் யாழ் நொத்தாரிசு செல்லையா மகேசன் முகதாவில் 1990.05.05ம் திகதி 4464ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் வீரசிங்கம் தனபாலசிங்கம் கைம்பெண் மகேஸ்வரி என்பவர் யாழ் நொத்தாரிசு K.M.இராகிருஷ்ணன் முகதாவில் 2011.09.09ம் திகதி 715ம் இலக்கத்தில் உருத்துவிளம்பல் சமர்ப்பித்துள்ளார். குறித்த ஆதனம் வீரசிங்கம் தனபாலசிங்கம் கைம்பெண் மகேஸ்வரி என்பவர் யாழ் நொத்தாரிசு K.M.இராகிருஷ்ணன் முகதாவில் 2011.09.09ம் திகதி 716ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் இரத்தினம் செல்வநாயகம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கம் என்பவர் யாழ் நொத்தாரிசு K.M.இராகிருஷ்ணன் முகதாவில் 2011.09-24ம் திகதி 731ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் இரத்தினம் செல்வநாயகம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இரத்தினம் செல்வநாயகம் என்பவர் யாழ் நொத்தாரிசு K.M.இராகிருஷ்ணன் முகதாவில் 2013.05.30ம் திகதி 978ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

### ஆதன இடாப்பு

**முதலாம் ஆதனம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாண பகுதி. யாழ்ப்பாண பிரதேச செயலகம். யாழ் மாநகரசபை (U/105) கந்தர்மடம் தென்கிழக்கு கிராமஅலுவலர் பிரிவு வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று. வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "ஐயன் வளவும் ஆணைக்காரன் குருவித் தோட்டம்" நிலப்பரப்பு ஒன்று குளி பதினொன்றும் (நில.பர.1 குளி 11) வீடும் வான்பயிர் செய்பயிர்களும், இதற்கெல்லைகளாக:

கிழக்கு - நல்லதம்பி இராசநாயகத்தின் உரிமைக்காரரின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும்
மேற்கு - சிவானந்தன் பரமகுருநாதனுக்கும் தம்பையா வல்லிபுரநாதனுக்கும் உரிய ஆதனங்கள்
வடக்கு - உத்தேசம் பத்தடி (10) அகலம் கொண்ட பாதை நிலம்
தெற்கு - சிவானந்தம் பரமகுருநாதனுக்குரிய ஆதனமும் இதடங்கலும்
இன்னும் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வரி வாய்க்கால் பாவிப்புரித்தும்.
மேலும் வடக்கே உள்ள ஒழுங்கையூடாக சென்று கிழக்கே திரும்பி வைமன் வீதியை சென்றடையலாம்

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாண பகுதி. யாழ்ப்பாண பிரதேச செயலகம். யாழ் மாநகரசபை (3/105) கந்தர்மடம் தென்கிழக்கு கிராமஅலுவலர் பிரிவு வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று. வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "ஐயன் வளவும் ஆணைக்காரன் குருவித் தோட்டம்" நிலப்பரப்பு இரண்டு குளி ஒன்பது (நில.பர.2குளி 9) இது 1969ம் ஆண்டு தை மாதம் 28ம் திகதி நிலஅளவையாளர் ரி.கந்தையா அவர்களால் 4344ம் இலக்கத்தில் அளந்து வ்ரையப்பட்ட படத்தில் 2ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் கிழக்கு பக்கமாக நிலப்பரப்பு சைபர் குளி பதினாறரையும் (நில பர 0 குளி 16 1/2)

**இதற்கெல்லைகளாக**

கிழக்கு - குறித்த படத்தில் சுட்டப்பட்ட 3ம் துண்டு 13
மேற்கு - கனகசபை பெண் நளாயினியின ஆதனம்
வடக்கு - ஒழுங்கை
தெற்கு - சிவானந்தன் பரமகுருநாதனுக்கும் வீரசிங்கம் தனபாலசிங்கத்திற்குரிய ஆதனங்களும் இதடங்கலும் அருகருகே உள்ள இரு ஆதனங்களும் ஒன்றாக்கப்பட்டு பேணப்படும்

### ஆதன இடாப்பு

மேற்படி இறை "ஐயன் வளவும் ஆணைக்காரன் குருவித் தோட்டமும்" இரு ஆதனங்களும் ஒன்றாக்கப்பட்டு மொத்த நிலப்பரப்பு இரண்டும் குளி ஒன்பதரையும் (நில.பர.2குளி 9½ ) இது 2011ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 28ம் திகதி நிலஅளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 614ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் லொற் 2 என சுட்டப்பட்ட பாகமான நிலப்பரப்பு இரண்டும் குளி ஒன்பது தசம் இரண்டு (நில,பர2குளி 09.2)

**இதற்கெல்லைகளாக-**

கிழக்கு - எவ்.எஸ்.பி.நல்லதம்பி இராசராயகத்திற்குரிய ஆதனம்
மேற்கு - லொற் 1 என சுட்டப்பட்ட பாகமாகும்
வடக்கு - உத்தேசம் பதினொரடி (11') அகலம் கொண்ட பாதை நிலம்
தெற்கு - சிவானந்தனர் பரமகுருநாதனுக்கும் வீரசிங்கம் தனபாலசிங்கத்திற்குரிய ஆதனங்களும் இதடங்கலும் இன்னும் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

தற்போது இவ்வாதனத்தை தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கம் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கம் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(CR/45800)

## மரண அறிவித்தல்



மலர்வு 03 . 09 . 1956

உதிர்வு 05 . 03 . 2025

### தங்கவேலாயுதம் யோகேஸ்வரி (கமலி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும், கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேலாயுதம் யோகேஸ்வரி நேற்றுமுன்தினம் (05.03.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சுந்தரம் தம்பதியரின் மருமகளும், தங்கவேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், நகுலேஸ்வரி, செந்தூரன், இளங்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணகுமார், கௌரிகா, வேணிகா ஆகியோரின் அன்பு மாமியும், பசுந்தியா, பிரித்திகா, பிரவீன், செயான், அயான் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (09.03.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

**இல.98/1, பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

த.செந்தூரன் - 0044 7533 589423
த.இளங்குமரன் - 0094 7711 80383
க.நகுலேஸ்வரி - 0044 7845 765830

(CS/57679) J-1

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 24. கன்னியாஸ்திரி மட வீதி. 18/5 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல-111/4. மடம் வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகம் பெண் பற்றிமா அவர்கள் 08.09.2004ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 48ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனம் பற்றிய சாசனம் எதுவும் தன்னிடம் இல்லையென்றும் ஆனால் 25 வருடத்திற்கு மேலான நீண்டகால தமது ஆட்சியில் உள்ளதென்று வெளிப்படுத்தி தமது மகன் சண்முகம் மோகனகுமாருக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை, இல - 111/4. மடம் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகம் மோகனகுமார் 26.07.2006ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 269ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தனது தகப்பனாரான ஆறுமுகம் சண்முகத்திற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை. இல - 111/4. மடம் வீதி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகம் 10.07.2017ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 3032ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தனது பேர்த்தியாகிய மோகனகுமார் பெண் ரசிகாவிற்கு தனது சீவிய உரித்துக்கும் இவவின் தாயாரான திருமதி. சங்கேஸ்வரி மோகனகுமார் என்பவரின் சீவிய உரித்துக்கும் அமைய வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, இல-52. திருநாவற்குளம். வவுனியாவைச் சேர்ந்த மோகனகுமார் கைம்பெண் சங்ஸ்வேரி மற்றும் மோகனகுமார் ரசிகா ஆகியோர் 25.12.2024ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தியாகலிங்கம் கணதீபன் முகதாவில் 2848ம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-149/1. பாங்சால் வீதி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை நிக்ஸ்சன் மற்றும் நிக்ஸன் பெண் தர்சினி ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாணம் மாவட்டம். சுண்டிக்குளிக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கரையூர் இறை. "தேவரிக்குளம்" நிலப்பரப்பு 1/2. ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஞ.சுப்பிரமணியம் அவர்களினால் 13.06.2006ம் திகதி 952ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட நில அளவைப் படத்தில் லொட் 1 என காட்டப்பட்டுள்ளதன்படி குளிகள் பதினைந்து தசம் இரண்டு ஐந்து (15.25) ஆக அளந்து காணப்பட்டுள்ளது.


இதற்கு எல்லைகள்.
கிழக்கு :- மகேந்திரம் ஜொய்சியின் ஆதனம்.
வடக்கு :- தேவரிக்குளம்.
மேற்கு :- வாய்க்கால்.
தெற்கு:-ஒழுங்கை.
இவ்வாதனத்தின்.

G.S பிரிவு - J/74, D.S பிரிவு - யாழ்ப்பாணம். உள்ளூராட்சி சபை - யாழ் மாநகர சபை. தற்போது செபஸ்தியாம்பிள்ளை நிக்ஸ்சன் மற்றும் நிக்ஸ்சன் பெண் தர்சினி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது செபஸ்தியாம்பிள்ளை நிக்ஸ்சன் மற்றும் நிக்ஸ்சன் பெண் தர்சினி என்னும் பெயரிற்கு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த மாற்றம் ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர ஆணையாளர்.**
**யாழ் மாநகர சபை.**

(CR/44501) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறப்புத் தேவையுடையோருக்கு சாரதி அனுமதிப் பத்திரங்கள்!

## யாழ்ப்பாணத்தில் முன்மாதிரிகை

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ் மாவட்டத்தில் சிறப்புத் தேவையுடையோருக்காக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பதிவு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் வைத்து நேற்றுமாலை வழங்கப்பட்டன.

இலங்கைக்கே முன்னுதாரணமான வகையில் யாழ்ப்பாணம் மாவட்ட மோட்டார் வாகன திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு வடமாகாண மோட்டார் வாகன திணைக்களத்தின் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. இதன்போது உள்ளூரில் மாற்றுத் திறனாளிகளுக்கு தயாரிக்கப்பட்ட வாகனங்களுக்கு அனுமதி வழங்குமாறும், அதற்காக விசேட சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளின் விளைவாகவே, மோட்டார் வாகன தலைமையக தொழில்நுட்ப பிரவினதும், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவியுடனும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு வாகன பதிவு வழங்கப்பட்டு சாரதி அனுமதி பத்திரமும் அவர்களுக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சாரதி அனுமதிப் பத்திரத்தில் அவர்களுடைய வாகன இலக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆதலால், அந்த வாகன இலக்கங்களுக்கு உரிய வாகனங்களை மட்டுமே அவர்கள் செலுத்த முடியும். வேறு வாகனங்களை அவர்கள் செலுத்த முடியாது. 8 மோட்டார் வாகனங்களின் உரிமையாளர்களான எட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு இவ்வாறு சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. வேறு எவராவது பதிவுசெய்யும் பட்சத்தில், அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொண்டார். (ம-125)

### ஒட்டுசுட்டான்

# ஓட்டுத் தொழிற்சாலையில் பூர்வாங்கப் பணி ஆரம்பம்!

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை பல வருடங்களாக இடம்பெற்ற போர் காரணமாக மூடப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியாக இயக்கப்படுமு; பட்சத்தில் பல மக்களின் தொழில் வாய்ப்புக்களை உறுதிப்படுத்தும் தளமாக அமையும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர்க் காலத்தில் இது கைவிடப்பட்டது. 2015ஆம் ஆண்டளவில் மீள ஆரம்பிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. விரைவாக தொழிற்சாலையை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை புதிய தலைவரின் கீழ் முன்னெடுத்துள்ளோம் - என்றார். (ம-125)



தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தினால் மாணவர்களின் பன்முக ஆளுமைகளை விருத்திசெய்யும் நோக்குடன் பசுமை அறிவொளி நிகழ்சித்திட்டம் மல்லாகத்தில் கல்லாரைக் கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. (ச-41-27-66-20)

## அமெரிக்கக்...

இந்தியா உட்பட பல நாடுகள் மீது வரி சமநிலைப்படுத்தல் நடவடிக்கைகளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மேற்கொண்டு வருகின்றார். இந்த நடவடிக்கைகள் இலங்கைக்கு ஓர் எச்சரிக்கையே. ஆதலால், அமெரிக்காவின் வர்த்தகப் போரை அல்லது வரி சமநிலைப்படுத்தல் நடவடிக்கையை எதிர்கொள்ள இலங்கை தயாராக இருக்கவேண்டும்.

வர்த்தகச் சுவர்கள் அமெரிக்காவுடனான எமது அணுகலைத் தடுக்கும் முன்னர், அவசர, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். எமது மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தை குறித்து ஆழமாகச் சிந்திக்கவேண்டும். உதாசீனமாகச் செயற்படக்கூடிய விடயம் இதுவல்ல - என்றார். (அ-ம-இ)

## போர்...

வித்தார். பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு பெண்களே பெரும் பங்களிப்பு வழங்கினர். வீடு வீடாகச் சென்று அந்தக் கட்சியின் பெண்கள் பொய்யுரைத்தனர். எனவே, அதனைச் சரிசெய்யவேண்டிய பொறுப்பு எமது அணியிலுள்ள பெண்களுக்கு உள்ளது. மக்கள் மனம் அறிந்து சேவையாற்றுவதே சிறந்தது.

நுகேகொடையில் இருந்து கொழும்பு வரை நபரொருவர் மோட்டார்சைக்கிளில் நிர்வாணமாகப் பயணித்துள்ளார். மூன்று இடங்களில் எரிபொருளும் நிரப்பியுள்ளார். கடுகண்ணாவைப் பகுதியில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளார். நாட்டில் பாதுகாப்பு நிலைவரம் இவ்வாறுதான் உள்ளது.

தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இராணுவத்தின் எண்ணிக்கையை குறைக்க முற்படுவது பாரதூரமான விடயமாகும். எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாள் போர் ஏற்படுமா, இல்லையா என்பதை தற்போது தீர்மானிக்கமுடியாது. கிழக்கில் அடிப்படைவாத குழுவொன்று இருப்பதாக புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது. எனவே, எந்தநேரத்தில் தாக்குதல் நடக்கும் எனக் கூறமுடியாது. ஆதலால், இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு லட்சம்வரை குறைப்பது ஆபத்தானது - என்றார். (அ-ம-44)

## யாழ். போதனா...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தி, மருத்துவமனையை விரிவாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதற்கு, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள போதனாவின் காணி விடுவிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஊடகங்கள் தொடர்பான விடயதானத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளரால் கடிதம் ஒன்று எனக்கு வழங்கப்பட்டது. அந்தக் கடிதத்தை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடமும் அவர் சமர்ப்பித்திருந்தார். நான் அதன் பிரதியை உங்களுக்கு வழங்குகின்றேன். அந்தக் கடிதம் மிகவும் விரிவான கடிதமாகும். அதில் ஆளணி மதிப்பாய்வு மற்றும் பல்வேறு தரவுகள் உள்ளன. அந்த விடயத்துக்குள் செல்வதற்கு போதிய நேரம் இல்லாததால் நான் அந்த விடயத்துக்குள் செல்லவில்லை.

இந்தக் கடிதத்தின் மூலம் பணிப்பாளர் உட்கட்டமைப்பு மேம்பாட்டைக் கேட்கிறார். அத்துடன் மருத்துவமனையின் விரிவாக்கத்தையும் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனாட்சி அம்மன் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்குச் சொந்தமான நிலம் தற்போது பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே, அவர் அந்த நிலத்தை மருத்துவமனைக்குத் திருப்பித்தருமாறு கேட்கிறார். மணிக்கூடுக்கோபுர வீதியில் அமைந்துள்ள கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நிலத்தையும் அவர் கேட்டுள்ளார். எனவே இவை தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக அவர் ஒரு புதிய மகப்பேறு பிரிவு, இருதயவியல், இருதய மார்பு பிரிவு, உள்ளிட்ட மேம்பட்ட சிகிச்சைகளுக்கான சிறப்புப் பிரிவு மற்றும் 30 இற்கும் மேற்பட்ட சிகிச்சை உட்கட்டமைப்பு வசதிகள் தேவை என்று தெரிவித்துள்ளார். இதில் குறிப்பிட்ட நான்கு விடயங்களில் ஒரு விடயம் தொடர்பாக உங்கள் விசேடகவனத்தைஈர்க்கவிரும்புகின்றேன்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையிலுள்ள மகப்பேறு விடுதி 2012ஆம் ஆண்டில் பாழடைந்தமையால் அழிக்கப்பட்டது. அதன் பின்னர் நான்கு விடுதிகளுக்குரிய இடத்தில் 16 விடுதிகள் தற்போது செயற்பட்டு வருகின்றன. நீங்கள் அந்த அலகுக்குச் சென்றால் தாய்மார்கள் தரையில் தூங்கும் ஒரு பயங்கரமான சூழ்நிலையை அவதானிக்கலாம். முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத இடத்தில் தற்போதைய விடுதி உள்ளது. பெரிய அறுவைச் சிகிச்சைகளுக்குப் பின்னர் தீவிர சிகிச்சைப் பிரிவில் பராமரிக்கப்படும் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்குத் தாய்மார்கள் கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் நடந்து செல்ல வேண்டும். இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இந்த விடயத்துக்கு நீங்கள் முன்னுரிமையளிக்க வேண்டும். இந்த விடயங்களை அவதானித்து மகப்பேற்று விடுதி தொடர்பாக உடனடியாகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறேன் எனவும் கூறியுள்ளார். (அ-ம-26-125-27-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடப்படுகிறார்...

கைதுசெய்வதற்குரிய அத்தனை முயற்சிகளும் இடம்பெறுகின்றன எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகியுள்ள முன்னாள் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நாட்டில் உள்ளாரா? அல்லது தப்பியோடிவிட்டாரா? என பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்ததாவது:-

நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கமைய நாம்செயற்பட்டுவருகின்றோம். அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை பெறப்பட்டுள்ளது. இதுதொடர்பான அறிவித்தல் விமான நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவை மீறினால் சாதாரண சந்தேகநபர் ஒருவர் தொடர்பில் பொலிஸார் எவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பார்களோ அவ்வாறான நடவடிக்கையே முன்னாள்பதில்பொலிஸ்மா அதிபர் விடயத்திலும் இடம்பெறுகின்றது. அவரைக் கைதுசெய்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என தகவல் இல்லை. பயணத்தடை இருப்பதால் சட்டபூர்வமாகவும் செல்லமுடியாது - என்றார். (அ-ம-44)

## ஈஸ்டர்...

கண்டிக்கு நேற்று சென்றிருந்த ஞானசாரதேரர் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்றார். அதன்பின்னர் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னால் பிரதான சூத்திரதாரியொருவர் இருக்கின்றார் எனக் கூறினார்கள். அவரை தற்போது தேடுகின்றனரா?. பிரதான சூத்திரதாரி யாரென்பது எனக்குத் தெரியும். மிகுந்த பொறுப்புணர்வுடன் இந்தக் கருத்துக்களைக் கூறுகின்றேன். ஜனாதிபதியிடமும், பாதுகாப்புக்கு பொறுப்பாக உள்ள தரப்பினிடமும் அந்தத் தகவல்களை வெளிப்படுத்திய பின்னரே அதுதொடர்பான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்குவேன். பிரதான சூத்திரதாரி இருந்த இடம், அவர் பழகிய நபர்கள், ஸஹ்ரானை பயிற்றுவித்த விதம் என்பன உள்ளிட்ட அனைத்து உண்மைத் தகவல்களையும் வெளியிடவுள்ளேன் - என்றார். (அ-ம-44)

## தலைவர்...

என்ற அமைப்பொன்று புலம்பெயர் தமிழர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் ஊடாகவே இந்த அஞ்சலிப்பு நிகழ்வை நடத்த முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் பிரபாகரனுக்கான அஞ்சலி நிகழ்வுகளை தாயகத்திலும் புலத்திலும் சமநேரத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசியத் தலைவர் தொடர்பான பல்வேறு விவாதங்கள் அண்மைக்காலமாகவே முன்வைக்கப்பட்டுவருகின்றன. அத்தகைய விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாகவே, தேசியத் தலைவரின் வீரவணக்க நிகழ்வை உணர்வெழுச்சியுடன் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான ஊடகச் சந்திப்பையும் அவர்கள் இணையவழியில் நடத்தியதுடன், சிறப்பு ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளனர். (அ-ம-இ)

## தமிழரசுக்...

மாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் இணைந்து செயலாற்றுவது சம்பந்தமாக தங்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தீர்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆரம்பகர்த்தாக்களில் ஒன்றான எமது கட்சி, பல்வேறு விதமான சவால்கள், விமர்சனங்கள், இடையூறுகள் எல்லாவற்றையும் தாண்டி, எமது மக்களின் இனநலன்களையே பிரதானப்படுத்தி ஒற்றுமையாகவும், பலமாகவும் பல விட்டுக்கொடுப்புகளோடும், சகிப்புத்தன்மையோடும் தொடர்ந்தும் பயணித்துவருகிறது.

2023ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக தங்களுடைய மத்திய குழு, வவுனியாவிலும் பின்னர் இறுதியாக மட்டக்களப்பிலும் எடுத்த ஏகோபித்த முடிவிற்கமைய தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது.

எமது கட்சியும், புளொட் அமைப்பும் அந்த நேரத்தில், தேர்தல் நலன்கள், வெற்றி தோல்விகள், அதிகாரங்களை தக்க வைத்துக்கொள்ளல் என்பவற்றைத் தாண்டி இன நலன்சார்ந்து ஒருமித்துப் பயணிக்கவேண்டிய கட்டாயத்தை தங்கள் கட்சித் தலைமையிடம் வலியுறுத்திய போதும், தங்களது கட்சியின் மத்திய குழுவின் முடிவே இறுதியானது என்ற அடிப்படையில் தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை உறுதியாக அறிவித்தீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நலிவடையாமல் தொடர்ந்தும் பாதுகாப்பதன் நோக்கத்தோடு தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்த கட்சிகளோடு ஒன்றிணைந்து கூட்டணியாக நாம் பயணித்துக்கொண்டிருப்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

'இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முகம் கொடுத்திருக்கும் எமது இனம், தேர்தல் நலன்களை மாத்திரம் முக்கியப்படுத்தும் இந்தப் பிரிவின் மூலம் எதிர்காலத்தில் பெரும்சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்' என்பதை தீர்க்கமாக நாம் எதிர்வு கூறியிருந்தோம்.

இன்று அந்த நிலைக்கு எங்களுடைய இனம் தள்ளப்பட்டிருப்பதை நன்கு உணர்ந்து, இணைந்து செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி, தாங்கள் முன்வைத்துள்ள அழைப்பை நாங்கள் வரவேற்கிறோம். இன நலத்திற்காக விட்டுக்கொடுப்போடு பயணிப்பதற்கு நாம் எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

விடுதலைப் போராட்ட காலத்தில் இருந்தே அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்பது எமது இனத்துக்கு நலன் பயக்கும் என்ற கொள்கையோடு ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகியோருடன் விடுதலைப் புலிகளையும் இணைத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எப்.) என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்கள் நாங்கள்.

கடந்த 2024ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் நாம் மக்கள் நலன் சார்ந்து ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்போடு வெற்றி தோல்விகளை கருத்திற்கொள்ளாது பயணித்தமையையும், அம்பாறை மாவட்டத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாடு தங்கள் கட்சியின் நிலைப்பாட்டால் தொடரமுடியாமல் போன துரதிர்ஷ்டமான சூழலையும் கவலையுடன் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தங்கள் அழைப்பை ஏற்று, எமது கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளோடும் கலந்தாலோசித்த பின்னர், ஒன்றிணைந்து பயணிப்பது சம்பந்தமான தீர்க்கமான ஒரு முடிவை எட்ட நாம் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது. (அ-ம-27)

## சடலம்...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இறந்தமைக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக தடயவியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மேலதிக பொலிஸ் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-113)

## வடக்கின்...

மத்திய கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அபிஷேக் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அஷ்நாத் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிவுக்குக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்றைய முதல்நாள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அதிகபட்சமாக அனுசாந் 49 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். (அ-ம-125)

## பரபரப்பான...

அணிகளின் போர்' கிரிக்கெட் ஆட்டம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜோன்சன் 61 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் விஜயகுமார் இவொன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆட்டத்தின் இரண்டாம்நாள் இன்றாகும். பொன் அணிகளின் போர் இம்முறை மூன்று நாள்களைக் கொண்டதாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## வெளிநாட்டு...

இளைஞர் ஒருவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், வெளிநாட்டு சிகரெட்கள் கைமாற்றப்படுகின்றன என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 160 வெளிநாட்டுசிகரெட் பெட்டிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

## ஆபிரிக்கப்...

தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில், ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இதையடுத்து, அது தொடர்பில் தொடர்புகொண்டு கேட்டபோது மருத்துவர் சிவகுருநாதன் வசீகரன் மேலும் தெரிவித்ததாவது:-

ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சலானது பன்றிகள் மூலம் பன்றிகளுக்குப் பரவும் தன்மை வாய்ந்தது. வடக்கில் பல இடங்களில் இந்த வைரஸ்தொற்று பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் 50 பன்றிகள் இறந்த நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இரண்டு பண்ணைகளுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளியில் உள்ள பன்றி வளர்ப்புப் பண்ணையில் 40 பன்றிகள் இறந்த நிலையில் அந்தப் பண்ணையும் முடக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் 700 பன்றிகள் இறந்த நிலையில், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இரண்டு பண்ணைகள் முடக்கப்பட்டுள்ளன. மன்னார் உள்ளிட்ட இன்னும் பல பகுதிகளிலும் பன்றிகள் உயிரிழந்த நிலையில், அவற்றின் குருதி மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சலானது மனிதரில் நோயை ஏற்படுத்தாதபோதும், பன்றிகளில் மிக வேகமாகப் பரவி அவற்றில் பலத்த உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய நோயாகும். நோயுற்ற பன்றிகளின் நேரடித் தொடுகை மூலமாக மட்டுமன்றி மனித உடல், உடை மற்றும் வாகனங்கள் ஊடாகவும் வேறு பண்ணைகளில் நோய் பரவும் வாய்ப்புகள் அதிகம். ஆதலால், ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சலின் பரவுகையை தடுத்துநிறுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125-27-20-9)

## வவுனியா...

ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர். குறித்த இரட்டைக் கொலைகளுடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழுபேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், சந்தேகநபர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. ஆர். டி.சில்வா ஆஜராகி சந்தேகநபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணைகோரி மனுத்தாக்கல் செய்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதிகளால் பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு கடுமையாக வாதிட்டனர். எனினும், சட்டமா அதிபர் திணைக்களத்தினர் பிணைமறுப்புக்கு விசேட காரணங்களை முன்வைக்காததைத் தொடர்ந்து, குறித்த சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. (அ-ம-110-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்.7

யாழ். இணுவில் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த 28ஆம் திக்தி நடைபெறவிருந்த நிலையில் மழை காரணமாக பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-41)






# யாழ்.பல்கலைக்கழகத்தில் சர்வதேச இந்துமாநாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடம் 'இந்துக் கலைகள் ஒரு பன்முகப் பார்வை" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்துள்ள மூன்றாவது சர்வதேச இந்து மாநாடு 2025 நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். மாநாட்டுத் தலைமை உரையைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. தி. செல்வமனோகரன் கலந்து கொண்டு மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் உரையை ஆற்றினார்.

நிகழ்வில் மாநாட்டு ஆய்வடங்கல் நூலை மாநாட்டுப் பதிப்பாசிரியர்கள் குழுவின் பிரதம ஆசிரியரும், சைவசித்தாந்தத் துறையின் தலைவருமான கலாநிதி. பொ.சந்திரசேகரம் வெளியிட்டு வைக்கப் பிரதமவிருந்தினர் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் மூத்த பண்ணிசைக் கலைஞர் தாவடியூர் இ.திருஞானசம்பந்த னுக்கு 'ஞானவாச்சியம்' விருதும், அராலியைச் சேர்ந்த கலைஞர் சி. அமரசிங்கத்துக்கு தேகாந்த நிலையில் ' மெய்ப்பொருள் ' விருதும், இந்துசமய வளர்ச்சிக்கு கட்டமைக்கப்பட்ட நிறுவனம் சார்ந்து காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் வட இலங்கை சங்கீத சபைக்கு 'சிவ நிதி' விருதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தினரால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கி வரும் பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- சுத்திகரிப்பாளர்
- யாழ்ப்பாண உணவு வகைகள் சமைக்க கூடியவர்

தொடர்புகளுக்கு:- 070 745 8567

(CS/57678) J-1

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57653) J-1

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 17.02.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சேனாதிராசா ஜெயேந்திரன் (காந்தன்)**

(உரிமையாளர் - லிப்ரா மரத்தளபாட நிலையம்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினமான இன்று (07.03.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

77/61 இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 367 7099

(CS/57671) J-1

## தேர்தலுக்கு தயாராகும் பெரமுன

கொழும்பு, மார்ச் 7

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் எந்த சின்னத்தின்கீழ் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை. பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுவருகின்றது என ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

தேர்தலை எதிர்கொள்வதற்கான மொட்டுக் கட்சியின் ஏற்பாடுகள் தொடர்பில் அந்தக் கட்சியின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசத்திடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்படி தகவலை வெளியிட்டார்.

இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும் நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. மொட்டுச் சின்னத்தில் களமிறங்கவே எதிர்பார்க்கின்றோம். எனினும், வடக்கு, கிழக்கில் சிறு மாற்றம் வரலாம். பங்காளிக்கட்சிகளுடன் பேச்சு நடத்திவருகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் யாழ்நகர் பகுதி வெலிங்டன் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி செல்லும் பே.பொன்னம்பலம் பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் சகல ஆவணங்களுடன் இரண்டு பரப்பு மூன்று குளி காணி விற்பனைக்கு வீடுகள் அமைப்பதற்கு ஏற்ற இடம்

- ஆஸ்பத்திரி 100 மீற்றர்
- கீல்ஸ் புட்சிற்றி 50 மீற்றர்
- ஸ்ரான்லி றோட் வெலிங்டன் சந்தி 50 மீற்றர்

யாழ் பஸ்நிலையம் 200 மீற்றர்

தரகர் தேவையில்லை

தொடர்பு: 076 755 8606 - Whatsapp
077 638 5683



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07 .03. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org